## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


02.02.2019 ஆண்டவரை காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல்-திருப்பலி 02

03.02.2019 பொதுக்காலம் 4ம் ஞாயிறு - திருப்பலி 03

04.02.2019 புனித அருளானந்தர் - திருப்பலி 04

07.02.2019 புனித கொன்சாலோ கார்சியா- திருப்பலி 05

09.02.2019 அருளாளர் யூசேபியா பாலோமினா ஏனெஸ் - திருப்பலி 06

10.02.2019 பொதுக்காலம் 5ம் ஞாயிறு - திருப்பலி 07

11.02.2019 புனித லூர்து அன்னை திருவிழா - திருப்பலி 08

14.02.2019 புனிதர்கள் சிரில் தெதோடியஸ் - திருப்பலி 10

17.02.2019 பொதுக்காலம் 6ம் ஞாயிறு - திருப்பலி 11

22.02.2019 திருத்தூதர் பேதுருவின் தலைமைப் பீடம் - திருப்பலி 12

23.02.2019 புனித போலிக்கார்ப் - திருப்பலி 13

24.02.2019 பொதுக்காலம் 7ம் ஞாயிறு - திருப்பலி 14

25.02.2019 புனித லூயிஸ் வெர்சீலியா மற்றும் கலிஸ்துஸ் கரவாரியோ - திருப்பலி 15

27.02.2019 வியாகுல அன்னையின் புனித கபிரியேல் - திருப்பலி 17


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


1. சிவகங்கை சிங்கம் புனித அருளானந்தர் 18
2. புனித லூர்தன்னை புகழ்பாடுவோம் 21
3. அருளாளர் யூசேபியா பாலோமினா ஏனெஸ் வாழ்வு தரும் பாடம் 25
4. திருச்சபைச் செய்திகள் 27

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

### 02.02.2019 ஆண்டவரை காணிக்கையாக அர்ப்பணித்தல் விழா திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. மலா. 3: 1-4 II. 7 எபி. 2: 14-18 லூக். 2: 22-40

இறையேசுவின் அன்பு மக்களே, இன்று நமது திருஅவையானது ஆண்டவர் இயேசு ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட விழாவினைக் கொண்டாட நம் அனைவரையும் அழைக்கின்றது. ஒரு தாயானவள் கருத்தரித்து ஆண் குழந்தையைப் பெற்றால் ஏழாம் நாள் விலக்கு நாளாக இருக்கும் என்றும், 8வது நாள் குழந்தைக்கு விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் என்றும், தொடர்ந்து முப்பது நாட்களுக்குத் தூயவை எதையும் தொடக்கூடாது என்றும், திருத்தலத்திற்கு வரக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது (லேவி. 12). தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ள ஒரு செம்மறி ஆட்டுக் குட்டியையோ, ஏழையாக இருந்தால் இரு மாடப்புறாக்களையோ பாவப்பரிகாரப் பலியாகச் செலுத்தி தீட்டைப்போக்க வேண்டும் என்று ஆண்டவர் மோயீசன் வழியாகக் கொடுத்த இச்சட்டத்தை நிறைவேற்றவே அன்னை மரியா எருசலேம் தேவாலயம் சென்று குழந்தை இயேசுவையும், இரண்டு மாடப்புறாக்களையும் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறார். இந்த தூய்மைப்படுத்தும் சடங்கானது நம் ஒவ்வொருவருக்கும் திருமுழுக்கின் வாயிலாக நிறைவேற்றப்படுகிறது. நாம் நம்மையே தூய்மைப்படுத்திக் கொண்டு பிறரையும் தூய்மைப்படுத்தும் பணியைச் செய்திட இயேசுவை நமது வாழ்வில் மாதிரியாகக் கொண்டு, நற்செயல்களை, நல்ல குணங்களை ஆண்டவருக்கு காணிக்கையாக அர்ப்பணிக்க வேண்டிய வரமருள இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. இருளை அகற்றி ஒளிதரும் இறைவா, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் எரியும் மெழுகுவர்த்திகளாக தியாக வாழ்வு வாழ்ந்து, பலருடைய வாழ்க்கையில் ஒளியாகத் திகழ்ந்திடவும், தீமையை அழித்து நன்மை செழித்தோங்கச் செய்திடவும், இறையரசைக் கட்டியெழுப்பும் கருவிகளாக மாறிடவும் தம்மையே இறைவனுக்கு உகந்த பலிப்பொருளாக காணிக்கையாக கையளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உன்னத உறவுகளின் ஊற்றே இறைவா, எம் நாட்டினை வழிநடத்தும் எம் தலைவர்களும், ஆட்சியாளர்களும் காலத்தின் தேவைகளுக்கேற்ப, முறையாகச் செயல்பட்டு, எங்கள் வாழ்வில் நம்பிக்கை ஒளியேற்றும் நல்ல தலைவர்களாக மாற வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. ஞானத்தின் இருப்பிடமே இறைவா, படிக்கின்ற மாணவச் செல்வங்களையும் அறிவு புகட்டும் ஆசிரியப் பெருமக்களையும் ஆசீர்வதியும். கல்வி அறிவில் மட்டுமன்று, நல்லொழுக்கம் மிக்க

மாணவச் செல்வங்களாக எங்கள் பிள்ளைகள் உருவாக ஆசிரியர்கள் தியாக உணர்வுடன் செயல்படவும், அவர்களின் தியாகத்தை மதித்து மாணவச் செல்வங்கள் வாழ்வில் முன்னேறவும் அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. ஏழைகளின் இறைவா, எம் பங்கில் உள்ள ஏழை எளிய மக்களுக்காக மன்றாடுகின்றோம். ஏழ்மை நிலையைத் தாழ்வாக எண்ணாமல், ஏழ்மையிலும் விசுவாசத்தோடு வாழ்ந்த திருக்குடும்பத்தை முன்மாதிரியாகக் கொண்டு எங்கள் பங்கிலுள்ள குடும்பங்கள் தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ள வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 03.02.2019 பொதுக்காலம் 4ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. D.V.R. ராஜா

I. எரே. 1: 4-5, 17-19 II. 1கொரி. 12: 31-13:13 லூக். 4: 21-30

இறையேசுவில் அன்புள்ள இறைமக்களே, இன்றைய ஞாயிறு சிந்தனையானது இறைவன் நம் ஒவ்வொருவரையும் தேர்ந்தெடுத்துள்ளார் என்பதே. இன்றைய முதல் வாசகத்தில் இறைவன் எரேமியாவை எவ்வாறு தேர்ந்தெடுத்து "நான் உனக்கு கட்டளையிடும் இடத்தில் உனக்கு அறிவுறுத்துவதை சொல் பயப்படாதே நான் உன்னோடு இருக்கிறேன்" என்று தேற்றுகிறார். இரண்டாம் வாசகத்தில் இறைவனால் தேர்ந்துக்கொள்ளப்பட்ட நாம் அன்பையே மையமாகக் கொண்டு வாழவேண்டும் என்றும், அன்பு இல்லையேல் நாம் எச்செயல் செய்தாலும் அது வீணே என்றும் புனித பவுல் கூறுகிறார்.

நற்செய்தியில் நம்மைத் தேர்ந்துக்கொண்ட இறைவனின் பணியைச் செய்யும் போது நம் சொந்த ஊரிலேயே எதிர்ப்பு வரும், பிரச்சனைகள் வரும். அவற்றைக் கண்டு நம்பிக்கைத் தளரக் கூடாது என்று இயேசு நம்பிக்கை ஊட்டுகிறார். நமது அழைப்பு குடும்பத்திலோ, பள்ளியிலோ, அலுவலகத்திலோ, சமுதாயத்திலோ இருக்கலாம் அந்த அழைப்பில் இறைவனே நமக்கு அரணும் கோட்டையுமாக இருந்து நம்மை வழி நடத்துவார் என்று நம்பிக்கைக் கொள்ள வேண்டும். அந்த அழைப்பில் நாம் அதிகாரத்தையோ, ஆள்பலத்தையோ காட்டாமல், அன்பையே கேடயமாகக் கொண்டு வாழ்ந்து நமது அழைப்பில் சிறப்பாகச் செயல்பட அருள் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருத்தந்தை மற்றும் திருஅவைக்காக செபிப்போம்: அன்பு தெய்வமே இறைவா, எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், இறைப்பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் நல்ல உடல் நலனையும் ஆன்ம பலத்தையும் தந்து பெற்ற அழைப்பில் சிறந்து விளங்க உமது வல்லமையைப் பொழிந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பங்குத் தந்தை மற்றும் பங்கு மக்களுக்காக செபிப்போம்: கருணையே உருவான தெய்வமே, எமது பங்கு தந்தையின் உடல் நலனைப் பாதுகாத்து, பங்கினை நல்லதோர் வளர்ச்சிப் பாதையில் நடத்திச் செல்லவும், பங்கு மக்கள் அனைவரின் ஒத்துழைப்போடும் பங்கின் வளர்ச்சியில் முழுநிறைவுக் காணவும் உமதாற்றலைத் தந்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அரசியல் தலைவர்களுக்காக செபிப்போம்: அன்பு தந்தையே இறைவா, நாட்டு அரசியல் தலைவர்கள் அனைவரும் உம் அன்பினாலும் அருளினாலும் தங்களுக்கு கிடைத்த வாய்ப்பினை உணர்ந்து, மக்களுக்குத் தேவையான அனைத்து நன்மைகளும் கிடைக்கப்பெற இவர்கள் உழைத்திடவும், தன்னலம் கருதாது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயல்படப் போதுமான தாராள மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. பெற்றோர்களுக்காக செபிப்போம்: அன்பின் பிறப்பிடமானவரே, எம் பெற்றோர்களை ஆசீர்வதியும். அவர்கள் தங்களின் அழைப்பை உணர்ந்து, பிள்ளைகளின்மேல் அக்கறைக் கொண்டு அவர்களை நல்வழியில் நடத்திச் செல்ல, போதுமான அருள் வரங்களைப் பொழிந்து காத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 04.02.2019 புனித அருளானந்தர் திருப்பலி

**முன்னுரை** திரு. டே. ஆக்னல் ஜோஸ்

அன்புக்குரியவர்களே, மறவ நாட்டின் மறைச்சாட்சியான புனித அருளானந்தரின் விழாவை இன்று நாம் சிறப்பிக்கின்றோம். போர்ச்சுக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்தவர் ஜான் தெ பிரிட்டோ. போர்ச்சுக்கல் இளவரசரின் நண்பராக இருந்தும், பதவி அதிகாரத்தின் மீது ஆர்வம் காட்டாமல், புனித சவேரியாரைப் பின்பற்றி, இந்தியாவில் நற்செய்தி அறிவிக்க வந்தார். தமது பெயரை "அருளானந்தர்" என்று தமிழ்ப்படுத்திக் கொண்டு, சேதுபதி மன்னர்கள் ஆட்சி செய்த தமிழகத்தின் மறவ நாட்டில் நற்செய்திப் பணியாற்றி ஏராளமானோரை மனந்திருப்பினார். கிறிஸ்தவத்தின் பரவலால் ஆத்திரமடைந்த சேதுபதி மன்னன், அருளானந்தருக்கு ரகசியமாக மரண தண்டனை நிறைவேற்றத் தீர்ப்பளித்தான். 1693 பிப்ரவரி 4ந்தேதி, ஓரியூரில் தலை வெட்டப்பட்டு அவர் மறைச்சாட்சியாக உயிர் துறந்தார். கிறிஸ்துவின் நற்செய்தி மேல் புனித அருளானந்தர் கொண்டிருந்த ஆர்வம் நம்மில் வளரவும், ஆண்டவர் இயேசுவுக்காக நம் உயிரையும் துச்சமாக மதிக்கும் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளவும் இத்திருப்பலியில் உருக்கமாக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. உண்மையின் உறைவிடமே இறைவா, புனித அருளானந்தரின் விழாவைச் சிறப்பிக்கும் இந்நாளில், உமக்கு உறுதியாகச் சான்று

பகரும் துணிவை, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் வழங்கி, உம் பணியினைத் தொடர்ந்து செயல்படுத்தப் போதுமான ஆற்றலையும் வல்லமையையும் தந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. மறைச்சாட்சிகளின் மணிமுடியே இறைவா, இயேசு கிறிஸ்துவின் நற்செய்திக்குச் சான்று பகர்வதற்காக, உலகின் பல பகுதிகளில் துன்பங்களைச் சந்திக்கும் மறைப் பணியாளர்களுக்குத் தேவையான மனத்திடமும் பாதுகாப்பும் வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. மாட்சியின் மன்னரே இறைவா, இந்திய நாட்டில் உமது நற்செய்தி பரவுவதற்கு இடையூறாக உள்ள அனைத்து தடைகளையும் நீக்கி, மக்கள் அனைவரும் விரைவில் உமது மேன்மையை அறிந்து மனந்திரும்ப வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 07.02.2019 புனித கொன்சாலோ கார்சியா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

கிறிஸ்து இயேசுவில் பிரியமான இறைசமூகமே, இன்றைய தினம் நமது திருஅவை புனித கொன்சாலோ கார்சியா என்ற புனிதரைச் சிறப்பிக்கின்றது. மும்பாய் நகரத்தில் "வசாய்" என்ற இடத்தில் போர்ச்சுக்கீசிய படைவீரருக்கும் இந்திய பெண்மணிக்கும் பிறந்தவர் இவர். இயேசு சபையைச் சார்ந்த பள்ளியில் நல்ல கல்வியறிவு பெற்று, தனது 12வது வயதிலேயே நற்செய்தியின் தாக்கத்தால் ஜப்பான் சென்று போதிக்க எண்ணினார். ஆனால் வயது குறைவு என்பதால் செல்ல முடியாமல் போக, 1576ல் இயேசு சபையைச் சேர்ந்த "செபஸ்டீன் கொன்சால்வா" என்பவருடன் ஜப்பான் சென்று ஜப்பான் மொழியில் புலமைப் பெற்று எட்டு ஆண்டுகள் மறைப்பணி செய்தார். பின் பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து மறைப்பணியைச் செய்து கொண்டிருக்கும்போது அங்கு வேதகலகம் உண்டாயிற்று. அந்நாட்டின் அரசர் புனிதர் கொன்சாலோவுடன் 5 பிரான்சிஸ்கன் துறவியரையும், 3 இயேசு சபை துறவியரையும் சாவுக்குத் தீர்ப்பிட்டார். "நாகாசாகி" என்ற இடத்திற்கருகில் ஒரு குன்றில் 1597ம் ஆண்டு பிப்ரவரி 5ம் நாளில் இவரை சிலுவையில் அறைந்து கொன்றனர்.

கிறிஸ்துவின் அன்பையும், இரக்கத்தையும் அதிக அளவில் போதித்தவர் புனித கொன்சாலோ கார்சியா. 1862ல் 9ம் பத்திநாதர் இவருக்கு புனிதர் பட்டம் வழங்கினார். எத்தகைய துன்பம் வந்தாலும் நற்செய்தி பணிக்காக உயிரைத் துறக்கும் பல புனிதர்கள் மத்தியில் புனித கொன்சாலோ கார்சியா நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்கிறார். இவரின் சேவையை நினைவில் கொண்டு பக்தியுடன் இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வானகத் தந்தையே இறைவா, எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினராகிய நாங்கள் பெற்றுக்கொண்ட மறைப்பணியைப் போதிக்கும் ஆர்வம் நிறைந்தவர்களாய், கிறிஸ்துவின் அன்பையும், இரக்கத்தையும் அதிக அளவில் நேசித்து சேவை புரிந்த புனித கொன்சாலோ கார்சியாவைப் போன்று மனஉறுதி உள்ளவர்களாக வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. தீயவை விலக்கி நன்மைப் பயக்கும் இறைவா, கிறிஸ்து இயேசுவின் நற்செய்தி பணியினை உலகெங்கிலும் அறிவித்துக் கொண்டிருக்கும் அருட்பணியாளர்கள், நற்செய்திப் பணியாளர்கள் அனைவரும் அச்சமின்றி எவ்வித நம்பிக்கைத் தளர்வும் அடையாமல் தங்கள் பணியைத் தொடர்ந்து செய்ய ஆற்றல் அளிக்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. நம்பிக்கையின் நாயகனே இறைவா, பல்வேறு நாடுகளுக்குச் சென்று பல ஆயிரக்கணக்கான மக்களை இயேசுவின்பால் நம்பிக்கை கொள்ளச் செய்து வேதசாட்சியாக சிலுவை மரணத்தை ஏற்ற புனித கொன்சாலோவை முன்மாதிரியாக ஏற்று இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை வைக்கும் நல்மக்களாய் வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 9.02.219 அருளாளர் யூசேபியா பாலோமினா ஏனெஸ் திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்

யூசேபியா பாலோமினா ஏனெஸ் 1899ம் ஆண்டு டிசம்பர் 15ம் நாள் ஸ்பெயின் நாட்டு சாலமானகா மாநிலத்தில் கோண்டால் பினோ என்ற குக்கிராமத்தில் பக்தியுள்ள உழைப்பாளி குடும்பத்தில் பிறந்தார். 9வது வயதில் புதுநன்மை வாங்கி இறையருளில் திளைத்தார். ஏழ்மையின் காரணமாக தனது படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு குடும்பத்திற்கு உதவினார். ஞாயிற்றுக்கிழமைகளில் சலேசிய கன்னியர் நடத்திய ஆரட்டரிக்குச் சென்றார். தன்னையே முழுவதும் இயேசுவுக்கு அர்ப்பணிக்க முடிவு செய்து சலேசியக் கன்னியர் ஒருவரிடம் தனது ஆர்வத்தை வெளிப்படுத்தி அவரது வழிக்காட்டுதலால் கன்னியர் சபையில் சேர்ந்தார். இவர் தம் வாழ்விலும் வார்த்தையிலும் விளங்கிய புனிதத்துவத்தை மாணவிகள் கண்டுணர்ந்தனர். இயேசுவின் இரக்கத்தையும் ஐந்து காயங்களைப்பற்றியும் அடிக்கடி இவர் எடுத்துரைத்தார். 1932ம் ஆண்டு ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டார். மூன்றாண்டுகள் அந்நோயால் துன்பப்பட்டு 1935ம் ஆண்டு பிப்ரவரி 10ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். 2004ம் ஆண்டு ஏப்ரல் 25ம் நாள் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. புண்ணிய வாழ்வின் அடித்தளமே இறைவா, கொடிய வறுமைப்பிடியில், துவண்டு போகாமல், தளரா மனமும், விடாமுயற்சியும் கொண்ட சகோதரி யூசேபியாவைப்போல நாங்களும் எங்கள் அழைப்பின் மேன்மையை உணர்ந்து எந்நாளும் பிரமாணிக்கமாக வாழும் மனத்திடனை எங்களுக்குத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
2. தூய வாழ்வின் பிறப்பிடமே இறைவா, தனது அன்றாட கடமைகளையும், வாழ்க்கைப் பணிகளையும் புன்முறுவலுடன் ஏற்று, அயராமல் உழைத்து தனது வாழ்வாலும், வார்த்தையாலும் புனிதத்தைப் பரப்பிய சகோதரி யூசேபியாவைப்போல நாங்களும் கடமைகளைச் செவ்வனே செய்து, புனிதமடைய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. துறவறவாழ்வின் தூண்டுதலே இறைவா, சகோதரி யூசேபியாவைப்போல தியாக உள்ளத்துடன் பணிபுரியும் சலேசிய சகோதரிகளை ஆசீர்வதியும். எண்ணற்ற இளம்பெண்கள் இறையழைப்புக்குச் செவிமடுத்து, துறவற வாழ்வினை மேற்கொண்டு, ஆர்வமுடன் பணிபுரிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 10.02.2019 பொதுக்காலம் 5ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

*I.* எசா. 6: 1-8 *II.* 1கொரி. 15: 1-11 லூக். 5: 1-11

இறைவாக்கினர் எசாயா, பவுலடியார், பேதுரு இம்மூவரின் அழைப்புப்பற்றி இன்றைய அருள் வாக்குகள் எடுத்துரைக்கின்றன. இறைவனின் அழைப்பை இறைவாக்கினர் எசாயா கேட்டவுடன் "அசுத்த உதடுகள் கொண்டவன் நான். அருகதையற்ற நான் எப்படி அருள்வாக்கை உரைக்க முடியும்?" எனத் திகைத்து நின்ற வேளையில் ஆண்டவர் அவர் உதடுகளைத் தூய்மைப்படுத்தி, "துணிந்து செல் தயக்கம் வேண்டாம் நான் என்றும் உன்னோடு" என ஆறுதல் தருகிறார். அதேபோல் புனித பவுலடியாரையும் இறைவன் தடுத்து ஆட்கொண்டார், அவரை இறைவன் திசை மாற்றுகிறார். அவரும் இறைவாக்கு உரைக்கத் துணிந்து செல்கிறார் என்பதை இன்றைய இரண்டாம் வாசகத்தில் தெளிவாகக் காணலாம். திருத்தூதர்களுள் மிகச் சிறியவனாக என்னை இறைவன் அழைத்தார் என்று பவுல் கூறுகிறார்.

மேலும் இவையனைத்தும் இறைவனின் கொடையே எனத் தன் இயலாமையையும், இறைவனின் ஆற்றலையும் புனித பவுலடியார் ஏற்றுக்கொள்கிறார். இன்றைய நற்செய்தி வாசகத்தில் புனித பேதுரு இரவு முழுவதும் மீன் பிடிக்கிறார் ஒன்றும் கிடைக்கவில்லை. காலை வேளையில் கரையில் நின்ற ஒருவர் (இயேசு) "அந்தப் பக்கமாக வலையைப் போடுங்கள்" என்றார். மீன்பிடித் தொழிலை இளமை முதல் செய்து வந்தவருக்குத் தெரியாத இடமா? இருந்தாலும் மறுகேள்வி தொடுக்காமல்,

இரவு முழுவதும் முயற்சி செய்தோம் இப்போதுதான் கிடைக்கப்போகிறதா? என்ற அவநம்பிக்கையோடு, பரவாயில்லை, இன்னொரு முறை முயற்சி செய்வோம் என்றார். அதுவே பேதுருவின் வாழ்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அவரே திருஅவையின் தலைவராக இயேசுவால் தேர்ந்துக்கொள்ளப்பட்டார்.

எனவே இயேசுவின் அழைப்பை உணர்ந்து, இவ்வேளையில் நமது மனதை அவர் பக்கமாய் திருப்ப வேண்டும். மனந்திரும்ப நமக்கு நம்பிக்கை அவசியம், அப்படி நம்பிக்கையோடு நம்மை இயேசுவிடம் ஒப்புக்கொடுக்கும்போது நாமும் எசாயாவைப்போல், பவுலடியாரைப்போல், பேதுருவைப்போல் இறையருளைப் பெறுவோம், ஏற்றம் பெறுவோம். புது வாழ்வு நம்மில் மலரும். நமது இயலாமையைப் போக்கி இறைவனின் ஆற்றலில் ஏற்றம் காண எல்லாம் வல்ல இறைவனிடம் இத்திருப்பலி வழியாக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வானகத் தந்தையே இறைவா, உமது இறைப்பணிக்கென தேர்ந்துக் கொள்ளப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் ஆகியோரை நிறைவாக ஆசீர்வதியும். அவர்களின் இயலாமையை அகற்றி உமக்கு ஏற்புடைய பணியினைச் சிறப்பாகச் செயல்படுத்த அவர்களுக்குத் தேவையான ஆற்றலும், துணிவும் என்றும் அருளும்படி உம்மை மன்றாடுகிறோம்.
2. வழிகாட்டியே இறைவா, எம் ஆட்சியாளர்களின் பொறுப்பும், அதிகாரமும், இறைவனின் கொடை என்பதை உணர்ந்து ஏழை மக்களின் நலனுக்காக உழைக்கும் நல்ல மனதினைக் கொண்டு வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
3. நம்பிக்கையின் தந்தையே எம் இறைவா, உமது வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்த பேதுருவின் நம்பிக்கை எங்களிலும் வளர அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
4. அன்பு இறைவா, இறையழைத்தலின் மேன்மையை இளையோருக்கு உணர்த்தி, உம்பணியைச்செய்யும் ஆர்வத்தையும், இறைஞானத்தையும் இவர்களுக்கு அளித்து உம் அழைப்பில் துணிவோடு செயல்பட, போதுமான துணிச்சலையும், இறைபக்தியையும் கொடுத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 11.02.2019 புனித லூர்து அன்னை திருவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

இன்று நமது தாயாம் திருஅவை தூய லூர்து அன்னையின் திருவிழாவைக் கொண்டாட நம்மை அழைக்கின்றது. பிரான்ஸ் நாட்டில் மலையடிவாரத்திலுள்ள லூர்து நகர் என்ற குக்கிராமத்தின், ஆற்றருகே 14வயது சிறுமி பெர்னதெத் சூபிரூஸ் தன் தோழிகளுடன் விறகு

பொறுக்கிக் கொண்டிருந்தாள். அப்போது திடீரென ஓர் ஒளி, கண்களைக் கூசச் செய்தது. சிறுமி ஒளியை நோக்கி உற்றுப்பார்க்க, அங்கே அழகிய பெண் தன் கையில் செபமாலை ஏந்தியவாறு காட்சியளித்தார். செபமாலைச் சொல்லும்படி பெர்னதெத்துக்கு அழைப்பு விடுத்தார். 18 நாட்களுக்குத் தொடர்ந்து வரும்படியும், பாவிகள் மனம் திரும்ப செபிக்கவும், அங்கிருந்த குருவிடம் சொல்லி ஒரு ஆலயம் கட்டவும் கேட்டுக் கொண்டார்.

1858 ஆம் ஆண்டு பிப்ரவரி 11ம் நாள் அன்னையின் அற்புதக் காட்சித் தொடங்கி, 1858ம் ஆண்டு ஜூலை 16ம் நாள் வரை தொடர்ந்து 17முறை காட்சியளித்தார். பெர்னதெத் அப்பெண்ணின் பெயர் என்ன என்று கேட்டபோது "நாமே அமலோற்பவம்" என்று பதிலுரைத்தார். இறுதித் தீர்ப்புக்குப் பிறகுதான் அன்னை ஓய்வு பெறுவார். அதுவரை அன்னை மரியா தமது பிள்ளைகளைக் காக்கும் பணியில் செயல்பட்டுக் கொண்டேயிருப்பார்" என புனித ஜான் மரிய வியான்னி கூறுவது உண்மையிலும் உண்மை. பாவிகளுக்காகச் செபிக்கவும், மனம் வருந்தவும் அழைத்தார் லூர்து அன்னை. இம்மையில் மட்டுமன்று, மறுமையிலும் நம் அனைவரையும் மகிழ்விப்பதாக வாக்களித்தார். நாமும் தூய லூர்து அன்னையின் பரிந்துரையால் நலம் பெற பக்தியோடு இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாய் தன் பிள்ளைகளைத் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன் எனக்கூறிய இறைவா, கடவுளை அன்பு கூர்வது என்பது முழுமனத்துடன் நம் அயலாருக்குச் சேவை செய்வதாகும் எனக்கூறிய திருத்தந்தை பிரான்சிஸ், அவர் வழியில் அருள்பணியாற்றும் குருக்கள், கன்னியர், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் ஒருவரையொருவர் அன்பு செய்து வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. நல்வாழ்வு தரும் இறைவா, ஏழ்மை இல்லா உலகம் வேண்டும், செல்வச் செருக்கு ஒழிய வேண்டும், பிறரின் துன்பம் உணர வேண்டும், நாளும் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற மனநிலைக்கொண்ட தலைவர்கள் உருவாக அருள்புரிய உம்மை மன்றாடுகிறோம்.
3. "இதோ உமது அடிமையென்று" தன் வாழ்வையே உமக்களித்த அன்னை மரியாளைப்போன்று நாங்களும் உலக தீமைகள், சோதனைகள் வரும்பொழுது ஆண்டவரின் துணையை நாடும் தெய்வ பயத்தை எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 14.02.2019 புனிதர்கள் சிரில் மற்றும் மெதோடியஸ் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்றைய நாளில் சிறப்பிக்கப்படும் இப்புனிதர்கள் இருவரும் உடன் பிறந்த சகோதரர்கள். இவர்கள் இளமை முதலே இறைவனுடன் ஒன்றி வாழ்ந்தவர்கள். சிரில் திறமைகள் பல பெற்று "வல்லுநர்" என்னும் பட்டத்தையும் பெற்றார். மற்றவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காகக் கடுமையாக உழைத்தார். புனித மெதோடியஸ் இவருக்குப் பின் துறவற நிலையைத் தேர்ந்தார். புனித சிரில் சித்தியா நாட்டிற்குச் சென்று அம்மக்களை கிறிஸ்தவ மறையில் சேர்த்தார். இவர் பொதுத் தீர்வையின் படத்தை வரைந்து அந்நாட்டு அரசனுக்கு மறைக்கல்வி போதித்து, அரசரே திருமறையைத் தழுவி திருமுழுக்குப் பெற காரணமானார். சில ஆண்டுகளுக்குப் பிறகு அவ்வரசரும் துறவியானார்.

புனிதர்கள் சிரில், மெதோடியஸ் இருவரும் ஆர்வத்தோடு திருமறையைப் போதித்தனர். அநேகரை மனம் திருப்பினர். எனவே இருவரும் திருத்தந்தையால் ஆயர் பதவிக்கு உயர்த்தப்பட்டனர். சிரில் உரோமைக்கு திரும்பும் வழியில் எதிர்பாராத விதமாக நோயினால் இறந்தார். அதற்குப்பின் நீண்ட காலம் திருச்சபைக்காக உழைத்த மெதோடியஸ் பல எதிர்ப்புக்களைத் திருஅவைக்குள்ளேயே சந்தித்தார். "ஸ்லாவிக்" மொழியில் விவிலியம் முழுவதையும் எட்டு மாதங்களுக்குள் மொழி பெயர்த்தார். இதன் பின்னர் கி.மு. 885 ஏப்ரல் 6ம் நாள், இறைவனடி சேர்ந்தார். இன்றைய திருவிழாவினைச் சிறப்பிக்கும் இப்புனிதர்களைப் போல நாமும் நம்முடைய வாழ்வில் இன்னல்கள், இடறல்கள் ஏற்படும்போது நம்முடைய நம்பிக்கையைத் தளரவிடாமல் இறைவனையே பற்றிக்கொண்டு சாட்சிய வாழ்க்கை வாழும் வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரும் மறைப்பரப்புப் பணியில் ஆர்வத்தோடு ஈடுபடவும் இறைப்பணியில் ஈடுபடும் இவர்களுக்கு நல்ல ஆன்ம சரீர நலனும், உற்சாகமும், ஊக்கமும் உமது அருளாசீரும் அளித்திடவும் இறுதிவரை உம்மோடு நிலைத்திருக்க வேண்டிய வரமருளவும் உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பே உருவான இறைவா, உம்முடைய இறைவார்த்தையை ஆர்வமாக வாசிக்கவும், இறைவார்த்தையிலுள்ள பொருளை உள்வாங்கி அவைகளை எங்கள் வாழ்வில் கடைப்பிடிக்க தூய ஆவியின் துணையும் தூண்டுதல்களும் நிறைவாய் பொழியும்படி உம்மை மன்றாடுகிறோம்.
3. நலமளிக்கும் நல்லவரே இறைவா, இளையோர்கள் உலக காரியங்களில் மட்டும் தங்களின் திறமைகளையும், ஆற்றலையும் பயன்படுத்தாமல்,

கத்தோலிக்க விசுவாசத்தை வளர்க்கவும், திருஅவையைக் கட்டிக்காக்கவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 17.02.2019 பொதுக்காலம் 6ம் ஞாயிறு திருப்பலி

### முன்னுரை

திரு. பி. விக்டர்

I. எரே. 17: 5-8 II. 1கொரி. 15: 12, 16-20 லூக். 6: 17, 20-26

இறையேசுவில் இனிய நண்பர்களே, பொதுக்காலம் 6ம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்தில் பங்கேற்று அருள்பெற உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். இவ்வுலகில் மனித வாழ்வு முடிந்தவுடன் நாம் எப்படி இருப்போம்? எங்கு இருப்போம்? என்று குழம்பிய மனிதனுக்கு, "இறந்த பிறகு நமக்கு ஒரு மறுவாழ்வு உண்டு" என்கிற தெளிவைத் தருகின்றார் கடவுள். அதுமட்டுமன்று, கிறிஸ்து மரித்த மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பப்பட்டதுபோல நாமும் இயேசுவின் இரண்டாம் வருகையின்போது மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவோம், என்கிற உறுதியையும் அளிக்கின்றார். இத்தகைய நம்பிக்கையை நம்மில் நிலைநிறுத்தி இயேசுவின் இரண்டாம் வருகையின்போது அவரோடு நிறைவாழ்வை நோக்கிச் செல்ல வேண்டுமானால் இந்த உலகில் நாம் எப்படி வாழவேண்டும்? என்று விளக்குகிறது இன்றைய நற்செய்தி வாசகம். ஏழையரின் உள்ளத்தை உடையவர்களாக, துயருறும் வேளைகளில் முணுமுணுக்காதவர்களாக, அனைவரோடும் கனிவுடன் பழகுகிறவர்களாக, நீதியை நிலைநாட்டும் வேட்கைக் கொண்டவர்களாக, இரக்கச் செயல்களைச் செய்பவர்களாக, எப்பொழுதும் தூய்மையான உள்ளத்தினை உடையவர்களாக, எங்கும் எல்லோரிடத்திலும் அமைதியை, சமாதானத்தை ஏற்படுத்தும் நண்பர்களாக, நீதியை நிலைநாட்டும்பொழுது உண்டாகும் துன்பங்களைச் சகித்துக்கொள்பவர்களாக மாறவேண்டுமென்று கடவுள் நமக்கு எடுத்துரைக்கிறார்.

இதைத்தான் புனித யோவான் தனது கடிதத்தில் "கண்ணால் காணாத கடவுளை அன்பு செய்கிறேன் என்று சொல்லிக்கொண்டு கண்ணால் காண்கிற சகோதரனை அன்பு செய்யாதவன் பொய் சொல்லுகிறான் (1யோவா. 4: 20) என்றார். எனவே ஆண்டவரில் நம்பிக்கையுடையவராய் இவ்வுலக வாழ்வு முடிந்த பிறகும் விண்ணுலகில் ஆண்டவரோடு வாழ்வோம் என்கிற நம்பிக்கையுடையவராய் அதற்கேற்ற தகுதியுள்ள ஒரு பரிசுத்த வாழ்வு வாழவும், இறைநீதியில் பழகினவர்களாய் எல்லோரையும் அன்பு செய்து வாழவும், இறைமகன் இயேசுவின் உண்மையான சாட்சிகளாய் வாழவும் வரம்வேண்டி இத்திருப்பலியில் இணைந்து மன்றாடும்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, இறைமகன் இயேசு எங்களுக்கு வழங்கிச் சென்ற "நம்பிக்கையை" எம்மில் வளர்த்தெடுக்கும் பொறுப்பில் உள்ள திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியரை ஆளுகைச் செய்வீராக. இறைநம்பிக்கைத் தளர்ந்துபோய்க் கொண்டிருக்கும் இச்சூழலில் இவர்கள் தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு

இறைச்செயலிலும் உமது வழிநடத்துதலையும் துணையையும் தந்து, நிலையான நம்பிக்கையை வளர்த்தெடுக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. எம்மையாளும் எல்லாம் வல்லவரே, உமது ஆளுகையில் எமக்கும் பங்களித்து இவ்வுலகை ஆளும் அதிகாரத்தை எமக்களித்தவரே, எமது இந்திய திருநாட்டை ஆளும் தலைவர்களையும், தமிழகத்தை ஆளும் தலைவர்களையும் நீர் வழிநடத்துவீராக. எந்த நோக்கத்திற்காக இவர்களுக்கு இப்பதவிகளை நீர் தந்தீரோ, அந்த நோக்கத்தை அவர்கள் தங்களது பணிவாழ்வில் செயல்படுத்தி, நாட்டையும், மக்களையும் வளமான வாழ்விற்கு இட்டுச்செல்லும் பொறுப்புள்ள தலைவர்களாய் மாற்றிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நீதியின் நாயகனே இறைவா, இந்த உலகில் வாழும் ஒவ்வொருவரும் இறைநீதியின்படி வாழ வேண்டுமென விரும்புகின்றீர். இத்திருப்பலியில் பங்கெடுக்கும் எங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் உமது நீதிவாழ்வை வெளிப்படுத்தத் தயை செய்யும். உலக அநீதியில் உழன்று விடாமல் சுயநீதியில் எங்களை இழந்துவிடாமல், இறைநீதியைக் கடைப்பிடித்து வாழ்கிறவர்களாய் வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. நம்பிக்கையின் நாயகனே இறைவா, மனிதனை நம்பினீர் உமது நம்பிக்கையை அவன் பொய்யாக்கினான். உமது மனுமகனை நம்பினீர் அவரோ உமது நம்பிக்கையை வாழ்ந்துக் காட்டினார். இறைவா எம்மீது நீர் வைத்துள்ள நம்பிக்கையை வெற்றியடையச்செய்து நிறைவாழ்வில் உம்மோடு ஒன்றித்திருக்க உதவி செய்ய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 22.02.2019 திருத்தூதர் பேதுருவின் தலைமைப் பீடம் விழா திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

அன்புள்ள சகோதரிகளே, சகோதரர்களே, இன்று திருஅவையானது பேதுருவின் தலைமைப்பீட விழாவை நினைவுக்கூர்ந்து கொண்டாடுகிறது. நற்செய்தியில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பேதுருவிடம், உன் பெயர் பேதுரு. இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றிக்கொள்ளா என்கிறார் (மத். 16: 18,19). இவ்வாறு சொல்வதன் வழியாக இயேசு பேதுருவைத் திருச்சபையின் தலைவராக ஏற்படுத்துகிறார். அதனடிப்படையில் பேதுருவின் தலைமைப்பீட விழாவை நாம் கொண்டாடுகிறோம். கி.பி. 354ம் ஆண்டிலிருந்து இந்த விழாவானது கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நாளில் பேதுருவின் தலைமைத்துவம் எத்தகைய சிறப்பு வாய்ந்தது என்று சிந்தித்துப் பார்க்கவும், குருத்துவத்தின் மேன்மைகளை உணர்ந்து பெருமைப்படுத்தவும் நாம் அழைக்கப்படுகிறோம். இயேசு தாம் செய்த அனைத்து விதமான நற்செய்திகளின் பரிமாணத்தையும் பேதுரு

வழியாக மீண்டும் செயல்படுத்தினார். அவரைத் தம் பிரதிநிதியாக மேன்மைப்படுத்தினார். இதனை நினைவு கூறவும் திருத்தூதர்கள் மேல் கட்டப்பட்ட திருச்சபையானது ஒற்றுமையின் அடையாளமாகத் திகழவும் இறைவனிடம் மன்றாடி இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. பாறையாகிய பேதுருவை திருஅவையின் தலைவராக்கிய அன்பின் பிதாவே, பேதுருவைத் தொடர்ந்து திருஅவையைத் தலைமைத் தாங்கி நடத்தி வருகின்ற எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் ஆகியோர் பேதுருவைப்போல நேர்மையோடு தங்கள் ஆடுகளைப் பேணி வளர்க்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. வழிநடத்தும் வானகத் தந்தையே இறைவா, எங்களை ஆட்சி செய்யும் தலைவர்கள் ஒருபோதும் நேர்மைத் தவறிச்செல்லாமல் இருக்கவும், நீதியோடு ஆட்சி செய்யவும், மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய தாராள மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் ஆண்டவரே, எங்கள் வாழ்வில் ஏற்படும் அனைத்து செயல்களுக்கும், தீமைகளுக்கும் நீரே பொறுப்பானவர் என்பதை உணர்ந்தவர்களாய் நாங்கள் என்றும் நன்றியோடு உம்மைப் போற்றவும், துதிக்கவும், உம்மை பின்பற்றி நடக்கவும் தேவையான அனைத்து அருள்வரங்களையும் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 23.02.2019 புனித போலிக்கார்ப் திருப்பலி

**முன்னுரை** சகோ. டார்வின் யகோவா, அமதி

ஆண்டவர் இயேசுவில் அன்புள்ள இறைமக்களே, இன்று நம் திருஅவை 2-ம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டில் ஸ்மைர்னா என்ற இடத்தில் ஆயராகப் பணிபுரிந்து, கிறிஸ்துவின்மீது கொண்ட ஆழமான நம்பிக்கையினால் உயிரோடு எரித்துக்கொல்லப்பட்ட புனித போலிகார்ப் அவர்களை நினைவு கூறுகிறது. இயேசுவின் அன்புச்சீடரான புனித யோவானிடம் சீடராக இருந்த இவர், 2ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஅவையின் முக்கியமான தலைவர்களில் ஒருவர். திருத்தூதர்களின் இறப்புக்குப் பிறகு திருஅவையை பாதிக்கும் வண்ணம் பல்வேறு எதிர்மறைக் கொள்கைகள் உருவாக ஆரம்பித்தன. அவற்றையெல்லாம் எதிர்த்து திருஅவையின் மேன்மையைக் காத்தவர்கள் புனித போலிக்கார்ப் மற்றும் இவர் நண்பர் அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார். அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார் இவரைப்பற்றி கூறுகையில், "புனித போலிகார்ப் ஆண்டவர்மீது கொண்ட நம்பிக்கை அசைக்க முடியாத பாறையைப் போன்றது" எனக் கூறுகிறார். இன்று 21-ம் நூற்றாண்டில் வாழும் நம்முடைய நம்பிக்கை எவ்வாறு

உள்ளது? என்று சிந்திப்போம். புனித போலிகார்ப்பைப் போல இறைவனில் அசைக்க முடியாத ஆழமான நம்பிக்கை உடையவர்களாக வாழ வரம் வேண்டி இப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. இறைவழியில் இறைமக்களை வழிநடத்த உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் மற்றும் இருபால் துறவியர் அனைவரும் உம் வார்த்தையை வாழ்வாக்க வேண்டிய அருளை அளித்து காத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. இவ்வுலகில் வாழும் எல்லா மக்களும் ஏற்றத் தாழ்வுகளைக் களைந்து, எல்லோரும் ஒரு தாய் மக்கள் என்பதை உணர்ந்து சகோதரத் தன்மையுடன் வாழ வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. உலக காரியங்கள்மீது நம்பிக்கை வைத்து, உம்மீதுள்ள நம்பிக்கையை இழந்து விடாமல், நீர் எமக்கு செய்த அரும்பெரும் செயல்களை எண்ணி நாளுக்கு நாள் நாங்கள் நம்பிக்கையில் வாழவும் வளரவும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## 24.02.2019 பொதுக்காலம் 7ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

I. 1சாமு 26: 2, 7-9, 12-13, 22-23 II. 1கொரி 15: 45-49 லூக். 6: 27-38

இறையன்பில் தேர்ந்துக்கொள்ளப்பட்ட இறைமக்களே, திருஅவையானது இன்று ஆண்டின் பொதுக்காலம் 7ம் ஞாயிறு திருப்பலியைச் சிறப்பிக்கின்றது. இன்றைய திருப்பலியின் வாசகங்கள் அன்பையும், மன்னிப்பையும் கொண்டு வாழவேண்டும் என்ற சிந்தனை நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில் தாவீது அரசர் சவுலைக் கொல்வதற்கு சரியான சந்தர்ப்பம் கிடைத்தாலும், தான் இறைவனின் அன்புப் பிள்ளை, ஆதலால் கடவுளால் தேர்ந்துக்கொள்ளப்பட்டவர் தவறே செய்தாலும் அவரைப் பழித்தீர்க்கும் செயலை நான் செய்ய மாட்டேன் என்று விலகிச் செல்கிறார். இரண்டாம் வாசகத்தில் இறைஇயேசுவைச் சார்ந்தவர்கள், கோபம், பழிக்குப்பழி, வர்மம், வைராக்கியம் என்று மண்ணைச் சார்ந்து வாழாமல் அன்பு, மன்னிப்பு, பொறுமை என்று விண்ணைச் சார்ந்த இயேசுவைப் போன்றே எண்ணவேண்டுமென்று புனித பவுல் கூறுகின்றார்.

இவ்விரண்டு வாசகங்களின் மணிமுடியாக நற்செய்தியில் இறைமகன் இயேசு மன்னிப்பைப் பற்றியும், அன்பைப் பற்றியும் எடுத்துக் கூறுகிறார். நமது சிந்தனைகள் உயிர்த்த இயேசுவின் வழியில் விண்ணைச் சார்ந்த சிந்தனைகளா அல்லது மண்ணைச் சார்ந்த சிந்தனைகளா? அவ்வாறெனில், உயிர்த்த இயேசுவின் சிந்தனைகளைப் பெற்று வாழ அருள் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பு இறைவா, உம் பணியாளர்களாகத் தேர்ந்தெடுத்த எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவறத்தார் அனைவருக்காகவும் செபிக்கிறோம். உம் வல்லமையால் அவர்கள் எம்மை உம் வழியில் நடத்தியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. ஆற்றல் அளிக்கும் இறைவா, கல்வி என்பது அனைவருக்கும் அத்தியாவசியமானது என்பதை உணர்ந்து தியாக உள்ளத்தோடும், தன்னார்வத்தோடும் ஏழை எளிய மக்களுக்கு பணிபுரியும் நல்ல கல்வி நிறுவனங்கள் எம் நாட்டில் பெருக வேண்டுமென்றும், எம் அரசும் அதற்கேற்ப நல்ல திட்டங்கள் வகுத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கமே உருவான இறைவா, அனைத்து மருத்துவமனைகளையும் உமது பாதுகாப்பில் ஒப்புக்கொடுக்கிறோம். தவறான சிகிச்சையால் பலர் மிகவும் துன்பத்திற்கு உள்ளாகின்றனர். பணிபுரியும் மருத்துவர்களும், செவிலியர்களும், மற்றுமுள்ள பணியாளர்கள் அனைவரும் சேவை செய்யும் மனப்பான்மையுடன் அதைப் புனித பணியாக நினைத்து பணிபுரிய வேண்டிய நல்ல மனதினைத் தந்திட உம்மை மன்றாடுகிறோம்.
4. மன்னிக்கும் மனங்கொண்ட இறைவா, எங்கள் குடும்ப சூழ்நிலையாலும், சமூக வன்முறைகளாலும், மன்னிக்கும் குணத்தை மறந்து வாழ்கின்றோம். இனி வரும் காலங்களிலாவது உமது அன்பு பிள்ளைகளாக மன்னித்து வாழவும், அன்பு செய்யும் மனதினைத் தந்தருளவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 25.02.2019 புனித லூயிஸ் வெர்சீலியா மற்றும் கலிஸ்துஸ் கரவாரியோ

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்

அலோசியஸ் வெர்சீலியா 1873ம் ஆண்டு ஒலிவ ஜெசி என்ற இடத்தில் பிறந்தார். தனது 12ம் வயதில் தொன் போஸ்கோ நிறுவனத்தில் சேர்ந்தார். 1895ம் ஆண்டு குருப்பட்டம் பெற்று, பிறகு 10 வருடங்கள் உரோமை நகரிலுள்ள ஜென்சானோவில் நவ துறவற இல்லத்தின் அதிபராக பணியாற்றினார். பின்பு இவர் 1906ம் ஆண்டு தொன் போஸ்கோவின் கனவை நனவாக்க சலேசியர்களை அழைத்துக்கொண்டு முதல் முறையாக சீனாவிற்குப் பயணம் மேற்கொண்டார். மக்காவு என்னுமிடத்தில் சலேசிய தலைமையகம் ஒன்றை நிறுவினார். மேலும், சியு சோவ் என்ற இடத்தில் மறைப்பரப்பு மையம் ஒன்றை நிறுவி, அதே இடத்தில் 1920ம் ஆண்டு ஏப்ரல் 22ம் நாள் முதல் ஆயராக பொறுப்பேற்றார். தன்னலமில்லா பணியாளராகவும் தன்னுடைய மந்தைகளுக்கு உண்மையான ஆயராகவும் இருந்து செயல்பட்டார். அவர் தனது மறைமாவட்டத்தை உறுதியான

அடித்தளத்தின்மீது உருவாக்கினார். குருமடங்கள், தங்குமிடங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் முதியோருக்கான காப்பகங்கள் போன்றவைகளை நிறுவினார். இவர் தனது ஆயர் பணியை நல்லாயனின் வழியில் செய்து தம் குருக்களை மற்ற பணித்தளத்திற்கு அனுப்புவதற்கு முன்பே ஒவ்வொருவரின் விருப்பத்தையும் கேட்டறிந்து அதற்கேற்ப செயல்பட்டார்.

கலிஸ்துஸ் கரவாரியோ 1903ம் ஆண்டு தூரின் நகரிலுள்ள குவோர்னியில் பிறந்தார். இவர் 1922ம் ஆண்டு ஆயர் வெர்சீலியாவைச் சந்தித்து "நானும் உங்களோடு சீனாவிற்கு வருவேன்" என்று அவர் கொடுத்த வாக்கை இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நிறைவேற்றினார். பிறகு இவர் ஒரு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். மேலும் இவர் தனது துறவற அர்ப்பணத்தில் மிகுந்த பற்றுறுதியுடன் வாழ்ந்தார். 1930ம் ஆண்டு பிப்ரவரி 25ம் நாள் லின் சோவ் மாவட்டத்தில் ஆயர் தனது மேய்ப்புப் பணியை மேற்கொண்டபோது இவரும் இரண்டு ஆசிரியர்களும், இரு பெண் வேதியர்களும் மற்றும் ஒரு மாணவியும் உடன் சென்றனர். அவர்கள் தனிமையான ஓர் ஆற்றிலே சென்றுக் கொண்டிருந்தபோது வழிப்பறி கொள்ளையர்களால் தாக்கப்பட்டனர். தாங்கள் வழிநடத்திச் சென்ற இளம் பெண்களை வழிப்பறி கொள்ளையர்களிடமிருந்து காப்பாற்ற இவர்கள் முயன்றபோது, கொடூரமாக தாக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்கள் தங்களின் தியாக உணர்வினால் தூண்டப்பெற்று, நற்செய்தியின் தூதுவர்களாகப் பணியாற்றியதையும், வாழ்வை முழுவதுமாய் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தைகளுக்காக அர்ப்பணித்ததையும், கண்டுணர்ந்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவர்கள் இருவரையும் 1983ம் ஆண்டு மே 15ம் நாள் சலேசிய சபையின் முதல் மறைச்சாட்சிகளாக அறிவித்து, பின்னர் 2000ம் ஆண்டு அக்டோபர் 1ம் நாள் புனிதர்களின் நிலைக்கு உயர்த்தினார்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக வாழ்ந்து, வெற்றி வீரர்களான புனித அலோசியஸ் வெர்சீலியா மற்றும் புனித கலிஸ்துஸ் கரவாரியோ தரும் முன்மாதிரியைப் பின்பற்றி, பல்வேறு இன்னல்கள் மத்தியிலும் இறையாட்சிக்கான விதைகளை விதைக்கவும் தங்கள் பணிகளைத் தாராள மனதுடனும், திறமையுடனும் நிறைவேற்றவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இன்றைய இளைய தலைமுறையினர் உண்மையான இறை நம்பிக்கையில் ஊன்றி வாழவும், இலட்சியத் துணிவோடு வாழ்வின் போராட்டங்களைச் சந்திக்கவும், சமூக மாற்றத்திற்காக உழைக்கவும் வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இந்த நற்கருணைக் கொண்டாட்டத்தில் பங்கெடுக்கும் நாங்கள் அனைவரும் எங்கள் வாழ்வில் ஏற்படும் இன்னல்களை, நம்பிக்கையோடும், எதிர்நோக்கோடும் ஏற்றுக்கொண்டு புனித வாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 27.02.2019 வியாகுல அன்னையின் புனித கபிரியேல் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

கிறிஸ்து இயேசுவின் அன்பு இறைகுலமே, நமது திருஅவை இன்றைய நாளில், வியாகுல அன்னையின் புனித கபிரியேல் என்னும் புனிதரைச் சிறப்பிக்கின்றது. இத்தாலி நாட்டின் அசிசி நகரில் அரசாங்க அதிகாரியான "சான்டே" என்பவருக்கு 01.03.1838ல் 13 பிள்ளைகளில் 11வது பிள்ளையாகப் பிறந்தவர்தான் புனித கபிரியேல். இவரது இயற்பெயர் பிரான்சிஸ்கே பொசென்டி. சிறுவயதில் நன்கு கல்விக்கற்று இயேசு சபையினரின் பள்ளியில் இலத்தீன் மொழியில் சிறந்த மாணவராகத் தேர்ந்தவர். குருவானவராக விரும்பியும் உலகியல் நாட்டங்களினால் பின்தங்கினார். 1851ல் தீவிர காசநோயினால் துன்பப்பட்டு மாதாவிடம் மன்னிப்புக் கோரி குருவாக மதவாழ்வு வாழ உறுதி எடுத்து இத்தாலியின் "பாடுகளின் சபையில்" குருமாணவராக இணைந்து சேவைப் புரிந்தார். வியாகுல அன்னையின்மீது மிகுந்த பக்தியும், பாசமும் கொண்டவராகவும், மதகோட்பாடுகளுக்கு மதிப்பளித்து மிகக் கீழ்ப்படிதலுடன் வாழ்ந்தும், இயேசுவின் பாடுகளுக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து அவர்மீது அளவில்லா பக்தியும் கொண்டிருந்தார். குருமாணவராக இருந்த காலத்திலேயே அவருக்கு இருந்த காசநோயின் தீவிரம் அதிகமாக, மாதாவின் துணையை வேண்டி செபித்துக் கொண்டிருப்பார். இவர் ஐந்து ஆண்டுகள் துறவியாக வாழ்ந்தார்.

சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் படத்தையும், வியாகுல அன்னையின் படத்தையும் நெஞ்சில் வைத்து வானத்தை நோக்கி கண்களை உயர்த்தி, "ஓ என் அன்னையே விரைவாக வாரும்" என்று சொல்லியபடியே 23வது வயதிலேயே தன்னுயிரைத் துறந்தார். இவரது சேவையையும் பக்தியையும் கௌரவித்து 31.05.1908ல் திருத்தந்தை 10ம் பத்திநாதர் இவருக்கு முத்திபேறு பட்டத்தையும், 13.5.1920ல் திருத்தந்தை 15ம் பெனடிக்ட் (ஆசீர்வாதப்பர்) புனிதர் பட்டத்தையும் வழங்கினர். செபமும், சேவையும், அன்னையின் பக்தியும், இயேசுவின் பால் மிகுந்த அன்பும், கீழ்ப்படிதலும் கொண்ட புனித வியாகுல அன்னையின் புனித கபிரியேல் போன்று நாமும் அன்னையின்மீதும் இயேசுவின்மீதும் அன்பு கொண்டவர்களாக வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. விண்ணக தந்தையே இறைவா, விண்ணகத்தின் திறவுகோலைப் பெற்றுத்தந்த கிறிஸ்து இயேசுவின் உண்மைத் தொண்டராக வாழும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர்,

பொதுநிலையினராகிய நாங்கள் அனைவரும் உண்மைக்குச் சான்று பகர்கின்ற கிறிஸ்துவர்களாகவும், பிற மத சகோதரர்களுக்கு நல்ல முன்மாதிரிகளாகவும், நல் வழிகாட்டிகளாகவும் வாழ வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆறுதல் அளிக்கும் இறைவா, மகிழ்ச்சியில் உம்மில் திளைத்து, துன்பத்தில் துவண்டு, உலகியல் ஏற்றத்தாழ்வுகளில் சிக்கிக்கொண்டு வாழும் எங்களுக்கு உம்மை என்றுமே பற்றிக் கொண்டிருக்கக் கூடிய மனநிலையை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நம்பியவரைக் கைவிடாத இறைவா, அன்பே உருவான இயேசுவின் தியாகப் பலியின் பாடுகளை நேசித்து, வியாகுல அன்னையின் பரிதவிப்பில் பங்குகொண்டு அவரை அன்பு செய்து, திருஅவையின் ஒழுங்குகளுக்கு மதிப்பளித்து, உயிர்நீத்த வியாகுல அன்னையின் புனித கபிரியேல்போல் திருஅவையை மதித்து வாழ எங்களுக்கு வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2: விசுவாசத்தில் வளர...

## சிவகங்கை சிங்கம் புனித அருளானந்தர்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

புனித அருளானந்தர்... இவர்தாமே சிவகங்கையின் சிங்கம். சிவந்த மண்ணின் சிந்தனையாளர், சிகப்பு மனிதர், ஓரியூரின் ஒளிவிளக்கு. இவர் திருமுழுக்கு யோவானைப் போலவே "மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" என்று அறைகூவல் விடுத்தார். வாகன வசதியற்ற அக்காலத்திலேயே கோடை வெயிலின் கொடுமை, மிகுதியான மழை, பெருவெள்ளம், இயற்கையின் சீற்றம் விலங்குகளின் அச்சுறுத்தலோடு, மனித விலங்குகளின் எதிர்ப்பு ஆகிய எத்தகைய தடைகளும் இவரின் ஆன்ம தாகத்திற்குத் தடைப்போட இயலவில்லை. தணிக்க முடியவில்லை. பல நாட்கள் காட்டுப் புதர்களே அவருக்கு வீடுகளாயின, கருவேல மரங்களின் நிழலே கோயில், காய்கனிகளே இவரது உணவு. உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையிலும் நெடுந்தூரம் நடைப் பயணம் மேற்கொண்டு பலரை மெய் மறையில் சேர்த்தவர்.

திருமுழுக்கு யோவானின் இரத்தம் இயேசுவின் பணிவாழ்விற்குப் பாதை அமைத்தது. அருளானந்தரின் இரத்தம் தமிழக திருஅவைக்கு விசுவாச வழியைக் காட்டியது. தமிழகத் திருஅவை இன்று வலுவாக நிலைப்பெற்று பலப் பணிகளை ஆற்ற இவரே அடித்தளம் அமைத்தவர். இவரது தியாக வாழ்வால் நமது விசுவாச ஒளி இன்றும் சுடர்விட்டு ஒளிர்கிறது. இலட்சியத்திற்காக சிந்தும் இரத்தம் ஒதுபோதும் வீணாவதில்லை. அதற்குப் புனித அருளானந்தர் ஒரு சாட்சி. இந்த சிவகங்கைச் சிங்கம் ஜான்பிரிட்டோ பிறந்ததோ போர்ச்சுக்கல் நாட்டில்

லிஸ்பன் நகர். இவர் இம்மண்ணில் தடம் பதித்த நாள் 1647ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நாள். இவரை வார்த்தெடுத்தவர்கள் சால்வதோர் தெ பிரிட்டோ, பெறெய்ரா டோனா பிரிட்டெஸ் பெறெய்ரா. இவரின் தந்தை அரசனது நெருங்கிய நண்பர். ஜானுக்கு நான்கு வயதாகும்போது நாட்டைக்காக்கும் நற்பணியின்போது இவரின் தந்தை இறந்தார். அரசவை வாழ்வில் நாட்டமில்லாதவராக தாயின் அரவணைப்பில் வளர்ந்தார். ஆனாலும் இவரும் இவரின் சகோதரர்களும் அரசவையில் உள்ள குழந்தைகளுடன் விளையாடும் தகுதி பெற்றவராயிருந்தனர்.

பிறந்ததிலிருந்தே சிறுவன் ஜான் உடல் நிலையில் ஏற்றத்தாழ்வு அடைந்து வந்தார். 11 வயதில் உயிர் பிரிந்துவிடும் என்ற அளவிற்கு நோய் தாக்கியது. அவரின் அன்னை புனித சவேரியாரிடம் உருக்கத்துடன் மன்றாடினார். தன் பிள்ளைப் பிழைத்தால், சவேரியாரைப்போலவே நீண்ட அங்கியும், கச்சையும் அணிந்து ஓராண்டு வாழச் செய்வதாக வாக்களித்தாள். வேண்டுதலின்படியே பிழைத்தெழுந்தார் ஜான். வாக்களித்தபடியே இயேசு சபை துறவிகள் அணியும் அங்கியை அணிவித்து ஆண்டவருக்கு நன்றி கூறினாள். இளமையிலே தெய்வ பக்தியில் சிறந்து விளங்கிய ஜான், தன் தாயின் அனுமதியோடு இயேசு சபையில் 1662, டிசம்பர் 17ம் நாள் நவதுறவியாக சேர்ந்து தன் துறவற வாழ்வை ஆரம்பித்தார். 1664, டிசம்பர் 25ம் நாள் இறைமகன் இயேசு பிறந்த நாளில் இவரின் முதல் வார்த்தைப்பாட்டைக் கொடுத்தார். புனித சவேரியார், புனித இராபர்ட் தெ நோபிலி போன்றவர்களைப் போல தம் வாழ்க்கையையும் மேற்கொள்ள முடிவெடுத்தார்.

இறையியல், மெய்யியல் கற்க கோயம்பரா சென்று ஏழு ஆண்டுகள் பயின்றார். வேற்று மொழிகளையும் கற்றார். புனித சவேரியார் போல தானும் இந்தியாவில் பணிபுரிய வேண்டும் என்று ஆவல் கொண்டார். 1673ம் ஆண்டு பிப்ரவரி மாதம் குருப்பட்டம் பெற்றார். அடுத்த மார்ச் மாதமே, 25ம் தேதியன்று, மரியன்னையின் மங்கள வார்த்தை விழாவன்று, இந்தியா செல்ல வேண்டும் என்ற அவரது கனவு நனவானது. காபிடானா என்ற கப்பலில் இந்தியா புறப்பட்டார். அதே வருடம் செப்டம்பர் 4ம் நாள் கோவா வந்தடைந்தார். தனக்கு முன்மாதிரிகையான, பிடித்தமான புனிதர் சவேரியாரின் பாதுகாக்கப்பட்ட உடலைப் பார்த்து பக்தியுடன் முத்தமிட்டு மகிழ்ந்தார். தன் இறைப்பணியை ஆசீர்வதிக்கும்படி மன்றாடினார். இயேசு சபையின் மாநிலத் தலைவரது அழைப்பை ஏற்று, அவரோடு வந்தவர்களைச் சேர்த்துக்கொண்டு அம்பலக்காட்டை வந்தடைந்தார். தமிழ்மொழியை நன்கு கற்றுத் தேர்ந்தார். தெ நோபிலியின் வேத நூல்களும், போர்ச்சுக்கல் - தமிழ்மொழி அகராதியும், அம்பலக் காட்டிலிருந்த அச்சகமும், அங்கிருந்த ஓலைச் சுவடிகளும் இவரின் மொழிப் பயிற்சிக்குப் பெரிதும் உதவின. அப்போது சவேரியார், இஞ்ஞாசியார் இவர்கள் தங்கள் பெயர்களை மாற்றிக் கொண்டதுபோல இவரும் தன் பெயரை "அருளானந்தர்" என்று மாற்றிக்கொண்டார்.

தமிழகம் வந்தடைந்த அருளானந்தர் முதன் முதலில் செஞ்சிக் கோட்டைக்கு மேற்கே உள்ள "கொனை" என்ற ஊரினை அடைந்து தன் பணியை ஆரம்பித்தார். நடை, உடை, உணவு, பழக்க வழக்கம் அனைத்திலும் எளியவர்களைத் தேடும் குருவாக வாழ்ந்தார். பின் தஞ்சை நாட்டில் கொள்ளிட ஆற்றங்கரையில் அமைந்துள்ள தத்துவஞ்சேரியில் பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்றார். அவரின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் தளர்வுறாமல் சுற்றியலைந்து, குருக்களை உற்சாகப்படுத்தி கிறிஸ்துவை அறிவித்து திருமுழுக்குக் கொடுத்தார். தமது அயராப் பணியால் செஞ்சி மற்றும் தஞ்சை மாவட்டங்களில் இருந்த பிற மறையினரும் கிறிஸ்துவைப் பற்றி அறிந்துக்கொண்டு புனித அருளானந்தரிடம் திருமுழுக்குப் பெற்று, கிறிஸ்துவ மறையில் சேர்ந்து விசுவாசத்தில் உறுதி கொண்டார்கள். அங்கு தம் பணியை முடித்தவராய் இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் சிறு பகுதிகளை உள்ளடக்கிய மறவ நாட்டின் எல்லைப் பகுதியில் 1686ம் ஆண்டு மே மாதம் 5ம் நாள் பணியை ஆரம்பித்தார். நாடார் இன மக்கள் சிலரை மனந்திருப்பினார். மறைப்போதகப் பணியில் சிறப்பாய், முனைப்பாய் ஈடுபட்டார். ஆரம்பத்தில் ஆதரவாய் இருந்த சேதுபதி மன்னன், குமரப்பிள்ளை என்பவரோடு சேர்ந்து குற்றங்கள் புரிய ஆரம்பித்தார். அவர்மேல் வீண் பழியைச் சுமத்தி சித்திரவதைச் செய்தான். ஆயினும் அவரது புனிதத் தன்மையையும் கிறிஸ்தவ மதம் உண்மையான மதம் என்பதையும் புரிந்தவனாய் மறவநாட்டு அரசன் அவரை விடுதலைச் செய்தான். நான்கு ஆண்டுகள் சபைத் தலைவரின் ஆணைக்குப் பணிந்து போர்ச்சுக்கல் சென்று பயிற்சித் தளங்களில் போதித்தார். மீண்டும் இந்தியா திரும்பியவர், மறவ நாட்டின் உட்பகுதிக்கே வந்து பணியாற்றினார்.

முதல் பணியாக போலிகார் குலமுதுவன் தடியத்தேவரின் தீராத கண்நோயினைத் தீர்த்து வைத்தார். அவன் கிறிஸ்துவ மறையில் சேர்ந்தான். மனைவி ஐவரும் வைப்பாட்டிகள் பலரும் அவனுக்கு இருந்தனர். அருளானந்தரின் அறிவுரையைக் கேட்டு ஒருத்தியை மட்டும் மனைவியாக வைத்துக்கொண்டு, மற்றவர்களை விட்டுவிட்டான். கடைசி மனைவியான கடலாயி, தன் மாமன் சேதுபதியிடம் சொல்லி அருளானந்தரை வஞ்சம் தீர்க்க தலைப்பட்டாள். சேதுபதி அவளின் தூண்டுதலால் அவரையும் அவருடன் சேர்த்து உபதேசியார்களையும் கைது செய்து, அடி, உதை கொடுத்து மக்கள் மத்தியில் அவமானப்படுத்தினான்.

குனகப்பன் என்ற நல் மனத்தான் இந்த கைது நடவடிக்கை, அவமானப்படுத்தியதை எல்லாம் கண்டு அதற்கு எதிராகக் கிளர்ச்சியை ஆரம்பித்தான். மக்கள் கொதித்தெழுவார்கள் என்று பயந்தவனாய் அவரை ஓரியூர் கவர்னரிடம் அனுப்பி வைத்தான். அந்த மரண யாத்திரையிலும், அவர் அருந்திட குவளையில் பால்கொடுத்தவனின் ஊராம் புல்லூர் என்றறிந்து அவ்வூரினை "நெல்லூராக" ஆசீர்வதித்தார். அமைச்சர்கள்

ஆலோசனைப்படி உடையதேவன் அருளானந்தரின் தலையை வெட்டிக் கொலை செய்ய ஆணைப் பிறப்பித்தான். 1693, பிப்ரவரி 4ம் நாள் ஒரு மணல்மேட்டில் புனிதர் தலை வெட்டப்பட்டு விண்ணகம் சென்றார். அவ்விடம் இரத்தத்தால் பரவியது. மண்ணானது செம்மண்ணாய் மாறியது. நோய்களுக்கெல்லாம் மருந்துமானது. இந்த சிவகங்கைச் சிங்கம் சிந்திய இரத்தத்தால் மறவநாட்டை மட்டுமன்று, அனைத்து மனிதக் குலத்தையுமே புனிதப்படுத்தினார். அவரால் புனிதம் பெற்ற மண் மீண்டும் கறைபடியாது பார்த்துக்கொள்வோம்.

## புனித லூர்தன்னை புகழ் பாடுவோம்

திரு. ஜோசப்

மனிதம் மலர்ந்திட, உலகம் உயிர் பெற, இறையைத் தாங்கிய அன்னையே, உலகம் உயிரும் உயர்வும் பெற்று தனது மகனின் இறையரசு மலர்ந்திட மரியாள் காட்சி கொடுக்கின்றார். அவற்றில் மிக முக்கியமானது திருஅவையால் அங்கீகரிக்கப்பட்டது. லூர்து நகரில் 1858ம் ஆண்டு பிப்ரவரி 11ம் நாள் முதல் ஜூலை 16முடிய 18காட்சிகளில் தென் பிரான்சில் விறகு பொறுக்கும் பெர்னதெத் சுபீரூஸ் என்னும் 14வயது சிறுமிக்கு லூர்து நகரில் கொடுத்த காட்சி. பெர்னதெத்தின் கூற்றுப்படி லூர்து நகரில் உள்ள மசபியேல் குகையில் காட்சிகள் அரங்கேறியுள்ளன. ஜூலை 16 அன்று கடைசி காட்சியின்போது நான் இதுவரை அவர்களை இவ்வளவு அழகாகக் கண்டதில்லை என விவரிக்கிறார். 1860 ஜனவரி 18 அன்று உண்மையிலேயே கன்னி மரியாள் பெர்னதெத்திற்குக் காட்சி அளித்துள்ளார் என்று ஆயர் பறைச்சாற்றினார். 1958 திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் அன்னை காட்சியளித்த 100ஆம் ஆண்டின் நினைவாக "லே பெயேரினேஜ் எ லூர்டஸ்" என்னும் சுற்று மடலை வெளியிட்டார்.

### முதல் காட்சி

பிப்ரவரி 11, 1858 வியாழக்கிழமை தவக்காலம் துவங்குவதற்கு 1வாரத்திற்கு முன்னர் 14வயது பெர்னதெத் அவரின் சகோதரி டோனியெட் மற்றும் ஒரு நண்பர் விறகு சேகரித்துக் கொண்டிருக்கும் போது மசபியேல் குகையில் அழகிய இளம் பெண் ஒருவர் தோன்றினார். தான் கண்ட காட்சியை தன் சகோதரிக்குக் கூறி யாரிடமும் கூறவேண்டாம் என்று பெர்னதெத் கேட்டுக்கொண்டார். சகோதரி தாயிடம் கூற தாய் அவர்களைச் சில நாட்களுக்கு வெளியே அனுப்பவில்லை.

### இரண்டாம் காட்சி

பிபர்வரி 14 ஞாயிற்றுக்கிழமை திருப்பலி முடிந்து குகைக்குச் செல்ல உள்ளுணர்வு தூண்டியதால் 2 பெண்களுடன் சென்றுவர தாயிடம் அனுமதி பெற்றுக்கொண்டு, பங்கு ஆலயத்திலிருந்து தீர்த்தம் எடுத்துக் கொண்டு சென்றேன். நாங்கள் முழங்காலிலிருந்து ஜெபமாலை ஜெபிக்க ஆரம்பித்தோம். முதல் 10மணி முடிவதற்குள்ளாகவே அப்பெண் எனக்கு

காட்சி கொடுத்தார். நான் கொண்டு வந்திருந்த புனித நீரை மேல்நோக்கி வீச என் மனதுக்குள் அவர் கடவுளிடமிருந்து வந்திருந்தால் அப்படியே இருக்கட்டும். இல்லையேல் மறைந்து விடட்டும் என எண்ணினேன். நான் தீர்த்தத்தை எடுத்து வீச வீச அவரின் சிரிப்பு அதிகமானது. தலை வணங்கினார், நான் ஜெபமாலையை முடிக்கும் போது அவரும் மறைந்துவிட்டார்.

**மூன்றாம் காட்சி**

பிப்ரவரி 18ல் அழகிய பெண் பெர்னதெத்திடம் 15நாட்களுக்கு மசபியேல் கெபிக்கு வரும்படி அழைத்தார். முதலில் பெர்னதெத்தின் தாய் அனுமதிக்கவில்லை. மகளின் வற்புறுத்தலாலும், தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்ததாலும் அனுமதியளித்தார்.

**நான்காம் காட்சி**

பிப்ரவரி 19 பெர்னதெத் பாதுகாப்பிற்காக மெழுகுவர்த்தியுடன் குகைக்கு வந்தார். அவருடன் அவரது தாய், 2 அத்தைகள் என 8பேர் கலந்து கொண்டனர். பெர்னதெத்தின் இந்த செயல்களால் நகர மக்கள் உண்மையா இல்லையா என்று பேச ஆரம்பித்தனர். ஒரு சிலர் அவரைத் தொடர்ந்தனர். அவளிடம் அதிசயம் உள்ளது என நம்பினர்.

**ஐந்தாம் காட்சி**

பிப்ரவரி 26ம் நாள் இக்காட்சியின் போது 30பேர் கலந்து கொண்டனர். அப்பெண் அவருக்கு ஒரு ஜெபத்தைக் கற்றுத் தந்தார். பெர்னதெத் இதை வாழ்வின் ஒவ்வொரு நாளும் சொன்னார். அதை யாருக்கும் சொல்லவுமில்லை. எங்கும் எழுதி வைக்கவுமில்லை. இச்செய்தி மற்ற நகரங்களுக்கும் பரவியது. மக்கள் பலர் காட்சி தருவது அன்னை மரியா எனக் கருதினர்.

**ஆறாம் காட்சி**

பிப்ரவரி 21அன்று 100க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றார்கள். இக்காட்சியின் போது நீங்கள் பாவிகளுக்காக கடவுளிடம் ஜெபியுங்கள் என கேட்டுக் கொள்ளப்பட்டது. பெர்னதெத் காவல் ஆணையரால் விசாரிக்கப்பட்டார். அவரின் தந்தை இது இனிமேல் நடைபெறாது என உறுதியளித்தார்.

**ஏழாம் காட்சி**

பிப்ரவரி 23 சுமார் 150பேர் இருந்தனர். அங்கே வரி ஆய்வாளர், நீதிமன்ற அதிகாரி, மற்றும் காவல்துறை அதிகாரிகள் இருந்தனர். இக்காட்சியின் போது அப்பெண் பெர்னதெத்துக்கு ஒரு இரகசியம் சொன்னார். அதை பெர்னதெத் யாருக்கும் தெரியப்படுத்தவில்லை.

**எட்டாம் காட்சி**

பிப்ரவரி 24 சுமார் 250பேர் கூடியிருந்தனர். காட்சியின் செய்தி

தவம், தவம், தவம், பாவிகளுக்காக கடவுளிடம் ஜெபியுங்கள். பூமியை முத்தமிட்டு பாவிகளின் மன்னிப்பிற்காக ஒப்புக்கொடுங்கள்.

**ஒன்பதாம் காட்சி**

பிப்ரவரி 25ஆம் நாள் காட்சியின் போது நீரூற்றுக்குச் சென்று கழுவவும், நீரைப் பருகவும் அறிவுறுத்தப்பட்டேன். நான் அங்கு எந்த நீரூற்றையும் பார்த்ததில்லை என்றதற்கு, கைவிரலால் சுட்டிக் காட்டினார். ஒரு பாறையின் பக்கத்தில் சேராக இருந்த நீரைக் கண்டேன் மிகக்குறைவாகவும் மண்ணாகவும் இருந்தது. அதை என்னால் அள்ள முடியவில்லை. ஆனாலும் கீழ்ப்படிந்து மண்ணைக் கையினால் தோண்ட ஆரம்பித்தேன். அந்த நீர் அழுக்காக இருந்ததால் 3முறை கொட்டிவிட்டேன். 4வது முறை நீரைப் பருகினேன். இக்காட்சி மறைந்துவிட்டது. பெர்னதெத் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். நீருற்று பொங்கத் தொடங்கியது.

**பத்தாம் காட்சி**

பிப்ரவரி 27ம் நாள் 800 பேர் ஒன்று கூடியிருந்தனர்.

**11ஆம் காட்சி**

பிப்ரவரி 28ம் நாள் 1000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பெர்னதெத் நீதிபதியினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

**12ஆம் காட்சி**

மார்ச் 1ம் நாள் 1500பேர் ஒன்று கூடியிருந்தனர். உள்ளூர் இளவரசி கத்தரீன் லதாபீ ஒன்பது மாத கர்ப்பிணி, ஒரு விபத்தில் கைமுடங்கி இருந்தவர். நீரூற்றில் கையை நனைத்தவுடன் முழு சுகம் பெற்றார்.

**13ஆம் காட்சி**

மார்ச் 2ஆம் நாள் காட்சியில் நீ போய் குருக்களை இங்கே பவனியாக வரச்சொல், இங்கே ஒரு சிற்றாலயம் கட்டச் சொல் என்று அறிவுறுத்தப்பட்டாள். தன் 2 அத்தைகளோடு தந்தை பெரேமலேவை சந்திக்கச் சென்றாள். அவர் பெர்னதெத்திடம் உரையாடுவதைத் தவிர்த்தார். குருக்களால் குகையில் ஒன்றும் செய்ய இயலாது என கூறிவிட்டார். ஏனெனில் மதசம்பந்தப்பட்ட தரிசனத்தை ஊக்குவிக்க முடியாது என்றனர்.

**14ஆம் காட்சி**

மார்ச் 3ஆம் நாள் தந்தை பெரேமலே பெர்னதெத்திடம் உனது கோரிக்கைகளை ஏற்க முடியாது உனக்குக் காட்சி தரும் பெண்ணின் பெயர் என்ன என்று கேட்க சொன்னார், பெர்னதெத்தும் அவ்வாறு செய்ய வெறும் புன்னகை மட்டுமே பதிவானது.

**15ஆம் காட்சி**

மார்ச் 4ம் நாள் 9000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மூன்றாம் முறையாக அப்பெண் குருக்கள் அவ்விடத்திற்கு பவனி வரவும்

ஆலயம் கட்டவும் சொன்னார். யார் அந்தப் பெண்? எனக் கேட்க எனக்குத் தெரியாது என்றேன். அவரது பெயரைக் கேட்டு தெரிந்து கொண்டு வந்து சொல்லச் சொன்னார். அடுத்த நாள் குகைக்குச் சென்று ஜெபமாலை ஜெபித்தபின் உமது பெயர் என்ன என கேட்டேன். புன்னகையே பதிலாய் வந்தது. இதை அப்படியே தெரிவிக்கும் போது அவர் சிரிக்கிறார், இனிமேல் போக வேண்டாம் என்று கூறினார். திரும்பத் திரும்ப ஆலயம் கட்டச் சொல்லச் சொன்னார்கள். நீரூற்றில் கழுவி பாவிகளின் மனமாற்றத்திற்காக ஒப்புக் கொடுத்தேன். 15 நாட்களில் 3 இரகசியங்கள் எனக்கு அருளப்பட்டன. நான் இதுவரை உண்மையாக இருக்கின்றேன்.

### 16ஆம் காட்சி

மார்ச் 25அன்று அன்னை மரியா லூர்து நகரில் ஜெபமாலையைக் கரத்தில் ஏந்தியவளாய் காட்சியளித்தார். தொடர்ந்து 15 நாட்கள் காட்சி சந்திப்பிற்குப் பிறகு மூன்று முறை உங்களின் பெயர் என்ன என்று கேட்டதற்கு புன்னகை மட்டுமே பதிலாய் அமைந்தது. கடைசியாக 4வது முறை முயற்சியின் போது தனது கைகளை கீழே கொண்டு வந்து கண்களை விண்ணை நோக்கி கைகளை மார்பின் மீது மடித்து வைத்துக் கொண்டு "நாமே அமல உற்பவம்" என்று சொன்னார். நான் வார்த்தைகளை மறவாதபடி திருப்பி சொல்லியவாறு வீடு வந்தேன். என் தந்தை பெரேமலே ஆயரைச் சந்தித்துப் பேசினார், ஆயரோ நீர் குகைக்குப் போக வேண்டாம் எனக் கூறிவிட்டார்.

### 17ஆம் காட்சி

ஏப்ரல் 7 அன்று மருத்துவர் பியர் ரொமெய்ன்டோசஸ் இக்காட்சிகளை சந்தேகக் கண்ணோடு பார்த்தார். பின்னர் பெர்னதெத் நல்ல மனநிலையோடு தான் உள்ளார் என்று கூறினார். பெர்னதெத் அன்னையின் காட்சிகளின் போது வழக்கத்தை விட அழகாகக் காட்சியளித்தார். அவள் முழங்காலிலிருந்து ஜெபமாலை ஜெபித்துக் கொண்டிருந்தாள். இடக்கையில் ஜெபமாலை ஏந்தியும், வலக்கையில் ஆசீர்வதிக்கப்பட்ட மெழுகுவர்த்தியையும் ஏந்தி பக்தியுடன் ஜெபிக்கையில் மெழுகுவர்த்தியின் தீச்சுடர் அவளுடைய விரல்களில் பரவியது. ஆனால் அத்தீ அவளுடைய விரல்களுக்கோ தோளுக்கோ எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை இதைக்கண்டு வியந்தேன்.

ஜெபமாலை முடிக்கும் தருவாயில் அவளுடைய முகம் மறுரூபக் காட்சியின் பிரகாசமாய் இருந்தது. யாரையும் நெருங்கவிடாமல் தடுத்து கைகளை பரிசோதித்தேன். தீ சுட்டதன் அடையாளம் ஏதுமில்லை. ஜூன் 8, 1858 லூர்து நகரின் மேயர் பொது மக்கள் பார்வைக்கு தடைசெய்து குகையைப் பாதுகாத்தார். காவலர்களைக் காவலுக்கு நிறுத்தி வருவோருக்கும், இதைப்பற்றிப் பேசுவோருக்கும் அபராதம் விதித்தார்.

## 18ஆம் காட்சி

ஜூலை 16 அன்று இறுதிக் காட்சி. மசபியேல் குகையில் காவலர்கள் இருப்பதால் பெர்னதெத் வேலிக்கு வெளியே ஆற்றின் ஓரத்தில் முழங்கால் படியிட்டு ஜெபிக்கும் போது நான் கெபியில் இருக்கிறேன் என்றே உணர்ந்தேன். இதற்கு முன் நடந்த காட்சிகளைப் போன்றே அமைந்தது. நான் கண்டதெல்லாம் அன்னை எப்போதையும் விட அழகாய் இருந்தார். அன்னை சிறுவர் சிறுமியருக்கே தன்னை வெளிப்படுத்துகின்றார். அதுவும் மிகச்சாதாரண பாமர மக்களையே தேர்ந்துக் கொள்கிறார். அவர்கள் மூலம் அறிவியலுக்கும், மருத்துவத்துக்கும் அப்பாற்பட்ட புதுமைகளைத் தனது மகனிடம் பரிந்து பேசி பெற்றுத் தருகிறார் என்பதில் ஐயமில்லை.

## அருளாளர் யூசேபியா பாலோமினோ ஏனெஸ் வாழ்வு தரும் பாடம்

திரு. ஜான் அலெக்ஸ்

**சாலமான்கா ஊரில் ஒரு சிறுமலர்:** ஸ்பெயின் நாட்டில் சாலமான்கா மாநிலத்தில் கேண்டல்பினோ என்ற சிறு கிராமத்தில் 1899ல் டிசம்பர் 15ம் நாள் யூசேபியா பாலோமினா ஏனெஸ் பிறந்தார். இவரது தந்தை அகுஸ்தீன் பாலோமினோ கடவுள் பக்தி மிகுந்தவர். ஏழ்மையில் குடும்பம் சென்று கொண்டிருப்பினும், தனது தளரா நம்பிக்கையை விட்டதில்லை. காலத்தின் கோலத்தால் சில சூழல்களில் தனது தந்தையோடு சேர்ந்து யூசேபியாவும் அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று பிச்சையெடுக்கும் அளவிற்கு வாழ்வில் ஏழ்மை அவர்களை ஆட்கொண்டிருந்தது. ஆனால் அதற்காக அவர்கள் மனம் உடைந்துபோனதில்லை, மகிழ்ச்சியாக ஒரே நம்பிக்கையோடு இருவரும் அந்த சூழலை ஏற்று வாழ்ந்தார்கள்.

**தந்தையிடமிருந்து கற்றுக்கொண்டது:** அந்த தூர பயணங்கள் வழியே தனது தந்தை அவருக்கு இறை ஞானத்தையும், நம்பிக்கையையும் எடுத்துச் சொல்லுவார். யூசேபியாவும் இறைவனுடைய அன்பையும் மறையுண்மைகளையும் பற்றித் தெரிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். தனது குடும்பத்திற்காக உழைத்தார், செபித்தார். அதுமட்டுமல்ல, தனது குடும்பத்தாரால் அன்பு செய்யப்பட்டார் யூசேபியா. தனது பெற்றோரின் அனுமதியோடு தனது விருப்பப்படி இயேசுவை நற்கருணையின் வழியாக முதன் முதலில் தனது உள்ளத்தில் ஏற்றுக்கொண்டார். காலம் நகர்ந்தது. இளவயதில், ஒரு பணக்காரக் குடும்பத்தில் பணிப்பெண்ணாக வேலைக்குச் சென்றாள் யூசேபியா. இருப்பினும் அந்த இளம் வளர் பருவத்தில், இயேசுவுக்கே முதலிடம் கொடுத்து நெருக்கமான நட்பினை வளர்த்துக்கொண்டாள்.

**அருட்சகோதரிகளோடு சமையலறையில் பணி:** முன்னதாக சாலமான்காவிற்கு சிறுவர் சிறுமியரைக் கவனித்துக்கொள்ளும் பணிக்குச் சென்றவர், பிறகு தங்கும் விடுதியில் உதவியாளராகப் பணிபுரிந்தார். யூசேபியாவிற்கு ஒரு குறிக்கோள் இருந்தது. அதாவது தானும் ஒரு

அருட்சகோதரியாக வேண்டும் என்பது. ஒருநாள் பள்ளம் மேடுகளில் கொத்திக் கொண்டும், தோண்டிக்கொண்டும் வேலை செய்யும் போது மண்ணில் அழகான சகாய அன்னையின் மெடல் ஒன்று கிடைத்தது. அதிசயமாக சில நாட்களுக்குள் ஒரு தோழி யூசேபியாவை சலேசிய அருட்சகோதரிகள் நடத்திவரும் ஆரட்டரிக்குக் கொண்டு சேர்க்கிறாள். அங்கு அருட்சகோதரிகள் யூசேபியாவை தங்களுக்கு உதவியாக இருந்து தங்கிவிடுமாறு கூறினர். அன்று முதல் சமையலறையே இவருக்கு கல்விக் கூடமாக அமைந்தது, மற்ற சகோதரிகளும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் சமையலறைக்கு வந்து கள்ளமறியா இளம் சமையல் காரியான யூசேபியாவின் கனிவான அமுத மொழியில் நனைந்துவிட்டுச் செல்வது வழக்கமானது.

**நிறைவேறியது கனவு:** தனது ஒரே கனவான அருட்சகோதரியாக வேண்டும் என்பதை ஒருநாளும் அவர் மறந்ததில்லை. போதிய கல்வி இல்லாதது, ஏழ்மையான குடும்ப சூழ்நிலை இவையெல்லாம் யூசேபியாவை எந்த விதத்திலும் தடுக்கவில்லை. சாலமான்காவிற்கு வருகைத் தந்த சபையின் அகில உலக முதன்மை அன்னை யூசேபியாவின் விருப்பத்தை ஏற்று அவரை பார்சிலோனாவில் நவசன்னியாச மடத்திற்கு அனுமதித்தார். அங்கு தனது சக சகோதரிகளுக்குத் தாழ்ச்சியோடும் மகிழ்ச்சியோடும் ஆன்மீகத்தில் அவர்களை வழிநடத்தினார். 1924ல் சலேசிய அருட்சகோதரியானார். பிறகு வல்வேர்தெ தெல் கெமினோ என்ற இடத்திற்குச் சமையலுக்கும், இல்ல பராமரிப்பு உதவியாளராகவும் பணியாற்ற அனுப்பப்பட்டார். தொன் போஸ்கோவின் தனிவரத்திற்கேற்ப இவரும் சாதாரண பணிகளையும் அசாதாரண முறையில் சிறப்பாகச் செய்தார், கடவுளும் அவருக்கு நிறைவான அருட்கொடைகளைப் பரிசாகத் தந்தருளினார்.

**தன் ஆன்மீகத்தால் வியப்பில் ஆழ்த்தியவர்:** இளம் பருவப் பெண்கள் யூசேபியாவின் ஆன்மீகத்தால் பெரிதும் வியப்படைந்து, அவரின் வழிகாட்டுதலுக்காக ஏங்கினார்கள். அதனால் ஆரட்டரியில் அவர் பணியாற்ற நேர்ந்தது. இவர் பெற்றுள்ள தூய ஆவியாரின் அபரி விதமான உந்துதலில், செபத்தில் மற்றும் ஆழமான நம்பிக்கையில் கொண்ட ஊக்கத்தினால், குருமட மாணவர்கள், பெரியவர்கள், குருக்கள் உட்பட யூசேபியாவின் ஆலோசனைகளை நாடினார்கள். இயேசுவின் தூய காயங்களின் பக்தியைப் பரப்பி வந்தார்.

**ஒரு தீர்க்க தரிசியாக:** தொன் போஸ்கோவைப் போன்றே யூசேபியாவும் கடவுளிடமிருந்து தீர்க்கதரிசன அருட்கொடையினைப் பெற்றவர். ஸ்பெயின் உள்நாட்டுப் போரை முன் கூட்டியே தீர்க்கதரிசனமாய் சொன்னவர், அதற்காக மறைச்சாட்சியாகவும் மாற ஆசைப்பட்டார். அச்சமயம் முதல் தன் உடல்நலத்தில் தொடர்ந்து சரிவுகளைக் கண்டார். மறைச்சாட்சியும் அருளாளருமான அருட்சகோதரி கார்மென் மொரேனோ

இவரது இல்ல இயக்குநராகப் பணியாற்றியவரின் பராமரிப்பில் இருந்து வந்தார். தனது மறைச்சாட்சிய வாழ்வை முன்னறிவித்தவர் யூசேபியா. பல்வேறு திருக்காட்சிகள் இவருக்கு வெளிப்படுத்தப்பட்டன. 1933 பிப்ரவரி 10ம் நாள் மறைந்தார். திருத்தந்தை 2ம் யோவான் பவுல் 2004 ஏப்ரல் 25ம் நாள் இவரை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார்.

**அழைத்தலின் மேன்மை:** ஒரு சாதாரண பெண், இரண்டு வருடங்களுக்கு மேல் பள்ளிப்படிப்பை பாதியில் விட்டவள், சிறுவர் சிறுமியரைக் கவனித்துக்கொண்டும் வீட்டுப் பணிப்பெண்ணாக வேலை செய்தவள் என்றும், அதே நிலையில் அவளை வைக்காமல், தங்களோடு ஒரு சக கன்னியராக வரவேற்று உருவாக்கிய அந்த சலேசிய அருட்சகோதரிகளின் உன்னதமான உயர்ந்த உள்ளத்திற்கு நாம் தலைவணங்க கடமைப்பட்டவர்கள் ஆகிறோம். இன்றைக்கு நமது அக்கம் பக்கத்திலும் நிறுவனங்களிலும், பெரிய பெரிய முதலாளிகளின் இல்லங்களிலும் இவரைப் போல எத்தனையோ இளம் பெண்கள் வீட்டுப் பணிப்பெண்களாய் வேலைச் செய்கிறார்கள். இவர்களின் தியாகத்தினால் பல குடும்பங்கள் பிழைத்துக் கொண்டு வருகிறதை நாம் பார்க்கலாம். இவர்களில் எத்தனை யூசேபியாக்கள் இருக்கிறார்களோ நமக்குத் தெரியாது. ஆனால் இவரது வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்தவர்கள் நடுவில் இத்தகையோர் இருப்பார்களேயானால், நிச்சயம் இன்னும் பல புனிதர்களை நாம் காணலாம்.

## திருச்சபைச் செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் ச.ச.,

### 12 இறை ஊழியர்களின் வீரத்துவ பண்புகள் ஏற்பு:

புனிதர் நிலை பேராயத் தலைவர், கர்தினால் ஆஞ்செலோ பெச்சு அவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை வத்திக்கானில் சந்தித்து, 12 இறை ஊழியர்கள் பற்றிய விவரங்களைச் சமர்ப்பித்தார். இந்தியாவின் இறை ஊழியர் அகஸ்டின் ஜான் உக்கேன் உட்பட, பன்னிரண்டு பேரின் வீரத்துவப் பண்புகளை ஏற்றுக் கொண்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். சீரோ மலபார் வழிபாட்டு முறையைச் சேர்ந்த அருள்பணியாளர் அகஸ்டின் ஜான் உக்கேன் அவர்கள், பிறரன்பு அருள்சகோதரிகள் சபையை ஆரம்பித்தவர்.

### 2018ல் உலகளவில் 40 மறைப்பணியாளர்கள் கொலை:

2018ம் ஆண்டில் உலகளவில் நாற்பது மறைப்பணியாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று வத்திக்கான் செய்தி நிறுவனமான பீதேஸ் கூறுகின்றது. ஒவ்வோர் ஆண்டின் இறுதியில், அவ்வாண்டில் கொல்லப்பட்ட மறைப்பணியாளர்கள் பற்றிய விவரங்களை வெளியிட்டு வரும் பீதேஸ் செய்தி, 2018ம் ஆண்டில் இந்தியாவில் ஒருவர், பிலிப்பைன்சில் இருவர் என ஆசியாவில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்

என்று தெரிவித்துள்ளது. கேரளாவில் 2018ம் ஆண்டு மார்ச் முதல் தேதியன்று, அருள்பணியாளர் சேவியர் தெலக்காட் அவர்கள் மலயாத்தூர் பங்குத் தளத்தில், முன்னாள் உதவியாளரால் குத்திக் கொலை செய்யப்பட்டார். 2017ம் ஆண்டில் 23ஆக இருந்த இவ்வெண்ணிக்கை, 2018ம் ஆண்டில் ஏறத்தாழ இருமடங்காகியிருக்கின்றது. 2018ம் ஆண்டில் உலகெங்கும் கொல்லப்பட்டுள்ள நாற்பது மறைப்பணியாளர்களில், 35 பேர் அருள்பணியாளர்கள் ஒருவர் குருத்துவ பயிற்சி மாணவர் மற்றும் நால்வர் பொதுநிலையினர்.

**2019, பூர்வீக இனத்தவர் மொழிகள் ஆண்டு:**

உலக மக்கள் தொகையில், ஏறத்தாழ ஆறு விழுக்காடு பூர்வீக இனத்தவர், உலக மொழிகளில் நான்காயிரத்துக்கு மேற்பட்டவைகளைப் பேசுகின்றனர். உலகெங்கும் பூர்வீக இனத்தவரின் மொழிகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கும் நோக்கத்தில், 2019ம் ஆண்டை பூர்வீக இனத்தவர் மொழிகளுக்கென அர்ப்பணித்துள்ளது, ஐக்கிய நாடுகள் நிறுவனம்.

**ஆசிய கத்தோலிக்கரின் தலையாயப் பணிகள் - கர்தினால் போ:**

கர்தினால் போ அவர்கள், ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் தலைவராகத் தன் பணியைத் துவக்கிய புத்தாண்டு நாளன்று, ஆசிய திருஅவைக்குள்ள கடமைகளை எடுத்துரைத்தார். நம்பிக்கையை வளர்த்தல், சமுதாய நீதி, மேய்ப்புப்பணியில் அக்கறை, மண்ணின் மைந்தர்களின் உரிமைகளை நிலைநாட்டுதல், மற்றும் மத நல்லிணக்கத்தை உருவாக்குதல் ஆகியவை, ஆசியாவில் வாழும் கத்தோலிக்கரின் தலையாயப் பணிகள் என்று , மியான்மர் கர்தினால் சார்லஸ் மாங் போ அவர்கள் கூறினார்.

**இறையியலாளர் அருள்பணி சாமுவேல் இராயன் மறைவு:**

ஆசிய ஆயர்ப் பேரவைகள் கூட்டமைப்பின் தலைவராகப் பொறுப்பேற்றதும் நான் வழங்கும் முதல் செய்தியை வருத்தத்துடனும், பணிவோடும் வெளியிடுகின்றேன். ஆசியாவின் தலைச்சிறந்த இறையியலாளர்களில் ஒருவரான அருள்பணி சாமுவேல் இராயன் அவர்களின் மறைவுக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள் என்று, மியான்மார் கர்தினால் சார்லஸ் மாங் போ அவர்கள் தன் இரங்கல் செய்தியில் கூறியுள்ளார். 1920ம் ஆண்டு கேரளாவில் பிறந்த சாமுவேல் இராயன் அவர்கள், தன் 19வது வயதில் இயேசு சபையில் இணைந்து, 35வது வயதில் அருள்பணியாளராக திருப்பொழிவு பெற்றார். இறையியல் பேராசியராக பல ஆண்டுகள் பணியாற்றிய அருள்பணி இராயன் அவர்கள், ஆசியாவின் தலைச்சிறந்த இறையியலாளர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். உடல்நலக் குறைவால், கோழிக்கோடு நிர்மலா மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த அருள்பணி இராயன் அவர்கள், சனவரி 2ல் தன் 98வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

## சுடர் வாசகர் போட்டி - 55 சரியான விடைகள்

1. மத்.2:1-12
2. யோர்தான் ஆறு
3. ஜனவரி 14, 2015ல் திருத்தந்தை பிரான்சிஸ்
4. அர்ஜென்டீனாவில், பாஹியா பிலாங்கா என்னுமிடத்தில் உள்ள சகாய அன்னையின் புதல்வியர் சபை சிற்றாலயத்தில்.
5. புனித தொன் போஸ்கோ
6. அருளாளர் புரோணிஸ்லாஸ்
7. தம் மகன் இயேசுவை இவ்வுலகில் பிறக்கச் செய்த கடவுள், மனிதரை தன்னலம் மற்றும் பாவத்திலிருந்து விடுவித்து, தம்மிடம் ஈர்ப்பதன் அடையாளமாக உள்ளது.
8. ஆர்டர் ஆப் தி விசிடேஷன்
9. திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர்
10. ஜென்ம பாவம் (தொடக்க நிலை பாவம்)
11. புனித ஜோசப் வாஸ்
12. இறைவனை என் முழு உள்ளத்தோடு அன்பு செய்வேன், ஒறுத்தல் முயற்சிகளைச் செய்வேன், கடவுளுக்கு எதிராக தீமை செய்வதைவிட சாவேன், அடிக்கடி ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெருவேன்.
13. புனித திமொத்தேயு
14. பொங்கல் விழா
15. அதிதூதரான புனித மிக்கேல் பக்தியை

**குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்**

***S. Kaviyarasi, Karikal***

***Sr. Melkior, Coimbatore***

***A. Alan Ruskin Roy, Chennai***

## சுடர் வாசகர் போட்டி - 56

1. மறவ நாட்டின் மறைசாட்சி யார்?
2. நாகாசாசி என்ற இடத்தில் குன்றின் மேல் சிலுவையில் அறைந்து கொள்ளப்பட்டவர் யார்?
3. இறைவனால் உதடுகளை தொட்டு தூய்மைப்படுத்தப்பட்ட இறைவாக்கினர் யார்?
4. பொதுத் தீர்வையின் படத்தை வரைந்து மறைக்கல்வி கற்றுத் தந்தவர் யார்?
5. சலேசியர்களை அழைத்துக் கொண்டு சீனாவிற்கு பயணம் செய்த முதல் சலேசியர் யார்?
6. கடலாயி யாருடைய மனைவி?
7. அருள்பணி சாமுவேல் இராயன் எந்த வயதில் இறந்தார்?
8. நமது வாழ்க்கையில் குழந்தையை தூய்மைப்படுத்தும் சடங்கு எது?
9. புனித அருளானந்தர் எந்த ஊரில் எப்படி இறந்தார்?
10. அருளாளர் யூசேபியாவை அருளாளர் நிலைக்கு யார், எப்போது உயர்த்தினார்?
11. "நாமே அமல உற்பவம்" என்று அன்னை மரியாள் எந்த இடத்தில் யாரிடம் கூறினார்?
12. "புனித போலிகார்ப் ஆண்டவர் மீது கொண்ட நம்பிக்கை அசைக்க முடியாத பாறையைப் போன்றது" கூறியது யார்?
13. "ஓ என் அன்னையே விரைவாக வாரும்" என்று கூறியபடி உயிர்நீத்தவர் யார்?
14. அருளாளர் யுசேபியா எத்தனை வயது வரை வாழ்ந்தார்?
15. "15 நாட்களில் 3 இரகசியங்கள் அருளப்பட்டன" கூறியது யார்?

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை மார்ச் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று

பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

பொதுக்காலம் 8ஆம் ஞாயிறு
புனித கசிமீர்
சிலுவையின் புனித யோசேப்பு
விபூதி புதன்
புனித பெர்பெத்துவா, பெலிசிட்டி
இறைவனின் புனித யோவான்
உரோமை நகர் புனித பிரான்சிஸ்
தவக்காலம் 1ஆம் ஞாயிறு
தவக்காலம் 2ஆம் ஞாயிறு
எருசலேம் நகர் புனித சிரில் ஆயர்
புனித யோசேப்பு கன்னி மரியாளின் கணவர் பெருவிழா
தவக்காலம் 3ஆம் ஞாயிறு
இயேசுவின் பிறப்பின் முன்னறிவிப்பு பெருவிழா
தவக்காலம் 4ஆம் ஞாயிறு

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

புனிதத்தில் வழிநடத்தும் தவமும், ஒருத்தலும்
கன்னி மரியாளின் கணவர் யோசேப்பு நம் குடும்ப வாழ்வுக்கு வழிகாட்டி
புனித பெர்பெத்துவா, பெலிசிட்டி வாழ்வு தரும் பாடம்
திருச்சபை செய்திகள்


### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:.....................................
முகவரி:..................................
..........................................
..........................................
..........................................

## பிப்ரவரி மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | வெ | புனித ஹென்றி மோர்ஸ் | எபி. 10: 32-39 | மாற்கு 4: 26-34 |
| 2 | ச | ஆண்டவரை காணிக்கையாக அர்ப்பணித்தல் | *I.* மலா. 3: 1-4<br>*II.* எபி. 2: 14-18 | லூக். 2: 22-40 |
| **3** | **ஞா** | **பொதுக்காலம் 4ம் ஞாயிறு** | *I.* எரே. 1: 4-5,17-19<br>*II.* 1கொரி. 12: 31-13:13 | லூக். 4: 21-30 |
| 4 | தி | புனித அருளானந்தர் | எபி. 11: 32-40 | மாற்கு 5: 1-20 |
| 5 | செ | புனித ஆகத்தா | எபி. 12: 1-4 | மாற்கு 5: 21-43 |
| 6 | பு | புனிதர்கள் பால் மீக்கியும் தோழர்களும் | எபி. 12: 4-7. 11-15 | மாற்கு 6: 1-6 |
| 7 | வி | புனித கொன்சாலோ கார்சியா | 2கொரி. 6: 4-10 | மத். 10: 17-22 |
| 8 | வெ | புனிதர்கள் ஜெரோம் எமிலியானி,<br>ஜோசபின் பக்கீத்தா | எபி. 13: 1-8 | மாற்கு 6: 14-29 |
| 9 | ச | புனித மிகுவல் பிப்ரஸ் கோர்தேரியோ | எபி. 13: 15-17,20-21 | மாற்கு 6: 30-34 |
| **10** | **ஞா** | **பொதுக்காலம் 5ம் ஞாயிறு** | *I.* எசா. 6: 1-8<br>*II.* 1கொரி. 15: 1-11 | லூக். 5: 1-11 |
| 11 | தி | புனித லூர்து அன்னை | தொநூ. 1: 1-19 | மாற்கு 6: 53-56 |
| 12 | செ | புனித ஜூலியன் | தொநூ. 1: 20-2:4 | மாற்கு 7: 1-13 |
| 13 | பு | புனித ரிக்சி கத்தரீன் அம்மாள் | தொநூ. 2: 4-9,15-17 | மாற்கு 7: 14-23 |
| 14 | வி | புனிதர்கள் சிரில், மெதோடியஸ் | தொநூ. 2: 18-25 | மாற்கு 7: 24-30 |
| 15 | வெ | புனித ப்ஷ்டீனஸ், புனித ஜோவித்தா | தொநூ. 3: 1-8 | மாற்கு 7: 31-37 |
| 16 | ச | புனித ஓனேசிமுஸ் | தொநூ. 3: 9-24 | மாற்கு 8: 1-10 |
| **17** | **ஞா** | **பொதுக்காலம் 6ம் ஞாயிறு** | *I.* எரே. 17: 5-8<br>*II.* 1கொரி. 15: 12, 16-20 | லூக். 6: 17,20-26 |
| 18 | தி | புனித குரியாக்கோஸ் எலியாஸ் சாவரா | தொநூ. 4: 1-15,25 | மாற்கு 8: 11-13 |
| 19 | செ | புனித கான்ராடு | தொநூ. 6: 5-8, 7: 1-5,10 | மாற்கு 8: 14-21 |
| 20 | பு | புனித பிரான்சிஸ்கோ & புனித ஜெசிந்தா | தொநூ. 8: 6-13, 20-22 | மாற்கு 8: 22-26 |
| 21 | வி | புனித தமியான் இராயப்பர் | தொநூ. 9: 1-13 | மாற்கு 8: 27-33 |
| 22 | வெ | திருத்தூதர் புனித பேதுருவின் தலைமைப் பீடம் | 1பேது. 5: 1-4 | மத். 16: 13-19 |
| 23 | ச | புனித போலிக்கார்ப்பு | எபி. 11: 1-7 | மாற்கு 9: 2-13 |
| **24** | **ஞா** | **பொதுக்காலம் 7ம் ஞாயிறு** | *I.* சாமு. 26: 2,7-9,12-13, 22-23<br>*II.* 1கொரி. 15: 45-49 | லூக். 6: 27-38 |
| 25 | தி | புனித வல்பர்கா | சீராக் 1: 1-10 | மாற்கு 9: 14-29 |
| 26 | **செ** | புனித மெக்தில்து அம்மாள் | சீராக் 2: 1-11 | மாற்கு 9: 30-37 |
| 27 | பு | வியாகுல அன்னையின் புனித கபிரியேல் | சீராக் 4: 11-19 | மாற்கு 9: 38-40 |
| 28 | வி | புனித ஹிலேரியஸ் | சீரா. 5: 1-8 | மாற்கு 9: 41-50 |